108

உ
சிவமயம்

திருவாமாத்தூர்த் தலவரலாறு

(உரைநடை)



பதிப்பாளர்
திரு. M. D. இராமசாமி ரெட்டியாரவர்கள்
உரத்தூர்
1960 [விலை 50 காசுகள்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருவாமாத்தூர்த்தலவரலாறு

(உரை நடை)

வண்ணச் சரபம்

அருள் மிகு—தண்டபாணி சுவாமிகள் அருளிய

தல புராணத்தைத் தழுவியது,

உரைநடையில் தொகுத்தவர்

திரு. சு. அ. இராமசாமிப் புலவரவர்கள்

கருப்பக்கிளர்-தஞ்சைமாவட்டம்

பதிப்பாளர்

திரு. M. D. இராமசாமி ரெட்டியாரவர்கள்

மிராசுதார்-உரத்தூர்

கும்பாபிஷேக வெளியீடு

சார்வரி ஆண்டு, ஆவணித் திங்கள் 14.ம் நாள்

29—8—60

உ
குருவே துணை

நூன்முகம்

திருவாமாத்தூர்த்தல வரலாற்றுச் சுருக்கம் என்னும் இந்நூல், வண்ணச்சரபம், ஸ்ரீ தண்டபாணி சுவாமிகள் இயற்றியருளிய, ஷ தலபுராணத்தைத் தழுவியது. அது ஆயிரம் கவிகளையுடையது. அதை உரைநடையில் எழுதி வெளியிட வேண்டுமென்ற அவா உள்ளத்தெழுந்தது.

அக்கால், தமிழ்ப் புலவரும், உரைநடை யெழுதும் ஆற்றலுடையாரும், உரிமை நண்பருமாகவுள்ள, திருவாளர், சு. அ. இராமசுவாமிப் புலவரவர்கள் நினைவு வந்தது. சென்னை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தி லிருந்து, பல உரைநடை நூல், ஆராய்ச்சி நூல்ஆகியவைகளை, ஓய்வின்றி யெழுதும் பெரும்பணியில் ஈடுபட்டிருப்பவர் அவர். அவரெழுதிய நூல்கள் நூற்றுக்கும் மேற்பட்டன. அவரது தெள்ளிய தமிழ் உரைநடை, மக்கள் பலருக்கும் இனிமைதருவன. ஆகவே அவரை எழுதித்தரும்படி விரும்பினேன்.

'' என்கடன் பணி செய்துகிடப்பதே '' என்ற முறையில், தமிழ்ப்பணியே தம் கடமையாகக் கொண்ட புலவரவர்கள், ஆண்டவனுக்குரிய தமிழ்த் தொண்டாக இது அமைந்ததுடன், எனது விருப்பத்தை நிறைவேற்றும் கடமையாகவும் அமைந்ததென்று மேற் கொண்டு இந்நூலை எழுதித்தந்தனர்.

ஆமாத்தூர்க் கும்பாபிடேக விழாச் சிறப்போடு தலத்தின் பெருமையையும் அன்பர்கள் அறியுமாறு பதித்து வெளியிடத் திருவருள் கூட்டியது. தலபுராணத்தைப்படித்தறிய இவ்வுரை நடை துணைபுரியும். தலபுராணம் அடுத்துப் பதித்து வெளிவரும்.

இதை எழுதியுதவிய, திரு. புலவ ரவர்கட்கும், பதித்து உதவிய, திருவாளர். உரத்தூர் - M. D. இராமசாமி ரெட்டியார் அவர்கட்கும் தமிழுலகம் என்றும் நன்றியுடையது. திருவருள் அனைவருக்கும் நலம் தருவதாக.

இங்ஙனம்

திருவாமாத்தூர், 29-8-60.

தி. செ. முருகதாச ஐயா,
தி. கௌமாரமடம்.

சிறப்புப் பாயிரம்

வித்வான் திரு. தி. மு. சங்கரலிங்கம்

தமிழாசிரியர் - திருவாமாத்தூர்

வெண்பா

திருவளரு மாதைச் சிவபெருமான் றன்னைக்
கருவளரும் புண்ணியத்தாற் கண்டு - மருவளரும்
பூசனைசெய் தோர்சீர் புராணமாய்ச் செய்திட்டான்
நேசவண் ணச்சரப னே.

வண்ணச் சரபமென மன்னுதண்ட பாணிநுவல்
தண்ணருளார் மாதைத் தலமேன்மை - பண்ணமையும்
பாடல்முறை பற்றிப் பகரும் உரைநடையாம்
ஈடமைந்த திந்தநூ லே.

பன்னூல் உரைநடையிற் பண்பு பெறஎழுத
மன்னுகந் தோயு மதிவாணன்—தொன்னூற்
றெடர்போன் இராம சுவாமிப் புலவன்
திடமுறத்தந் தானெழுதிச் சேர்த்து.

உரத்தூ ரினிற்றேன்றி உண்மையன்பு மேவிச்
சிரத்தையுடன் மாதைச் சிவன்றன் — திருப்பணியில்
தொண்டாற்றும் ராம சுவாமிரெட்டி யாரன்பாற்
கொண்டிதைப் சிட்டார் குறித்து.

கும்பாபி டேகம் குறிக்கும் விழாவதனில்
நம்பார்வத் தொண்டர்கொள நல்கினன்—பம்பா
நதித்திருவா மாத்தூர்வாழ் நம்ப னருளால்
உதித்திடும்நன் றெல்லாம் ஒருங்கு.

சிவமயம்

திருவாமாத்தூர்த் தல வரலாற்றுச் சுருக்கம்

(உரைநடை)

கடவுள் வாழ்த்து

விநாயகர்

திருவளர் திருவா மாத்தூர்ச்
சிவபிரான் புராண ந் தன்னை
[1] மருவளர் கொன்றைச் செம்பொன்
மாலிகை என்னப் பாடத்
தருவளர் கரங்கள் ஐந்தால்
சகலலோ கமுங்காத் தாள்வோன்
[2] குருவளர் கமலப் பூந்தாள்
கும்பிட்டுக் கருது கின்ரும்.

அழகிய நாதர்

பழகிய தொழிலா ந் தமிழ்த்துதி புரியப்
பணித்திடா தவரென விளங்கிக்
[3] கழகியுந் திருவும் பரவுசீ ருமையாற்
கரியமா யவன்தனல் தூண்டும்
[4] குழகியன் மதிச்செஞ் [5] சடிலநா யகனுர்
கோவெலாங் [6] கோடுறக் கொடுத்த
அழகிய நாதர் அவர்தம்ஆ மாத்தூர்
அணிசொலற் கவரருள் துணையே.

---

1. மரு-மணம், 2. குரு-செக்நிறம், 3. கழகி-கலைமகள், 4. குழகு-அழகு 5. சடிலம்-சடை. 6. கோடு-கொம்பு.

கூத்தப்பிரான்

வஞ்ச மற்ற தொண்டர் வந்து வந்துபோற்று மாதையூர்ச்
செஞ்ச ரித்தி ரங்களூடு சிறிது ணர்ந்து செப்பவே
[1] அஞ்சனக்கண் மங்கைமுன் [2] அரக்கன் மீதில் ஆடுவான்
[3] பஞ்ச கிர்த்தி யப்பதங்கள் பாடி அன்பில் நாடுவாம்.

தென்முகக் கடவுள்

அருந்தவருக்காரமுதாம் ஆமாதை ஊர்ச்சரிதம்
திருந்தருமைத் தமிழ்க்கவியால் செப்பிட நான் சிந்தித்தேன்
பெருந்தகையார் ஒரு [4] நால்வர் பேறெனக்கல் லால்அடியில்
இருந்தபடி இருந்தார்வந் தென்மனத்தும் இருந்தாரே.

முத்தாம்பிகை

தேவருமா முனிவோரும் நரரும் போற்றத்
திகழ்திருஆ மாத்தூரின் சீர்த்தி யாவும்
நாவருமாண்(பு)யானடையப் பெறுமா றிந்நாள்
நடத்தியதோர் விளையாட்டை நன்கு பேசிப்
பூவருமங் கையர் [5] இருவர் தாமுந் தாழும்
புனிதையைமுக் கண்ணன்முதல் புகலவாழும்
மூவருநம் பியமுத்தாம் பிகையைப் போற்றி
[6] முண்டகத் தாள் மலர்த்துணையை முன்னி வாழ்வாம்.

தலவிநாயகர்

ஆறுமதிச் சென்னியுளார் ஆமாத்தூர்ச் சீர்முழுதும்
வீறுதமிழ்ப் பாடல்களால் வேண்டியவா றேதுதற்கு
நாறுமலர்க் கொன்றையணி [7] நால்வாயை ஞாலமகிழ்
[8] மாறுயரம் தீர்த்தானை வணங்கிமிக வாழ்த்திடுவோம்.

---

1. அஞ்சனக்கண்-மையிடப்பட்டகண், 2. அரக்கன்-முயலகன், 3. பஞ்ச கிர்த்தியம்-ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல், என்பன. 4. நால்வர்-சனகர், சனற் குமாரர்-சனந்தனர், சநாதனர்-என்பவராவர், 5. இருவர் இலக்குமி-கலைமகள், 6. முண்டகம்-தாமரை, 7. நால்வாய்-யானை முகமுடைய விநாயகர், 8. மாறுயரம்-மரல்துயரம் எனப் பிரிக்க.

முருகக் கடவுள்

வேலுமயி லுந்துணையென் றுரைக்குமவர்
வினைமுழுதும் விலக்கு வானை
நாலுமறை உணர்பிரமா நடுநடுங்கப்
புடைத்தானை நண்ணு கின்றாம்
சேலுறழ்கண் மங்கையொரு பங்கிருப்ப
விடையுகைக்கும் சிவன் ஆ மாத்தூர்ச்
சாலுமகத் துவம்பலவும் தமிழ்க்கவியால்
பகருநலம் தருதி என்றே.

மூலநூலாசிரியர் முன்னுரை

செந்தமிழ்ப் பாண்டி நாட்டில் உள்ள திருநெல்வேலியில் தோன்றினேன். என்னுடைய பெயரை உலகத்தார் தண்டபாணி சுவாமி என்றும், முருகதாச சுவாமி என்றும், திருப்புகழ்ச் சுவாமி என்றும் மூன்று விதமாக மொழிவார்கள். முருகக் கடவுளின் திருவருளினால் அறுவகைச் சமய நெறிகளையும் உணர்ந்து பல சிவப்பதிகளையும் வணங்கினேன். திருச்செந்தூர் முருகன், தில்லைக் கூத்தப்பிரான், திருவரங்கத்தில் எழுந்தருளிய அரங்கநாதன் ஆகியோர் நான் விரும்பிய அருட்பேறுகிய பயனை நல்காமல் வழங்குவதாகக்கூறி, என்னை ஏமாற்றிப் பாடல்களைப் பெற்று மகிழ்ந்தார்கள். திருவாமாத்தூரில் எழுந்தருளிய இறைவனே திருக்கயிலையையும் வெறுத்துத் தன்னுடைய திருவாமாத்தூரரையே இருப்பிடமாகக் கொண்டு வாழுமாறு செய்தான். தன்னுடைய திருவாமாத்தூர்ப் பெருமைகளைப் புராணமாகப் பாடுமாறு வைணவ அந்தணன் மூலமாக அருளினான். எந்தப் புராணத்தையும் சூதமா முனிவர் நைமிசாரணிய முனிவர்கட்குக் கூறியதாகக் கூறுவதே வழக்கம். அப்பெருமை இதற்கும் உண்டு. இது, வடமொழிக் காந்தத்துள் நாகர காண்டத்தில் கூறப்பட்டதாகும். இப்புராணத்தை, யான் கலைமகள் எனக்கு அருள் புரிந்தவாறே கூறுகின்றேன்.

—:*:—

1. திருநாட்டுச் சிறப்பு

கடலால் சூழப்பெற்ற நிலவுலகமாதின் திருமுகம் எனத் திகழும் இத்தமிழகத்தின் ஒரு பகுதியாக விளங்குவது தொண்டை நாடு. தொண்டை நாட்டின் தென் பிரிவாகத் திகழும் நிலப்பரப்பை நடு நாடெனச் சான்றோர் வழங்குவர். இந் நாட்டின் ஒரு பகுதியினைத் திருமுனைப்பாடி நாடெனவுஞ் செப்புவர். தொண்டை நாட்டிற்குஞ் சோழ நாட்டிற்கும் இடைப்பட்டதாக இருத்தலின், நடுநாடு என்றலும் பொருந்தும்.

இந் நடுநாடு, சங்கினங்குலாவும் மருதம் முதல் ஐந்திணை நிலங்களும் சூழப்பெறுவதால், அவற்றுள் மருத நிலவளமேயுடைய நீர் நாடாகிய சோழ நாட்டினும் சிறந்ததென்று பந்தாடுஞ் சிறுவரும் பகர்வர். தன் சீர்கள் பலவற்றையும் நடத்தகுஞ் சிறப்புடைய தாகையால் நடு நாடெனவுஞ் சிலர் கருதுவர். பொய்ப் பொருளே மெய்யெனக் கூறும் அருகர்கள் (சமணர்கள்) புரிந்த மாயங்களை வென்று, மறைமுடிப் பொருளாம் திருவைந்தெழுத்தை யோதிக், கருங்கல்லே தெப்பமாகக் கடலில் மிதந்து, கரையேறிய நாவரசர் தோன்றிச், செயற்கருஞ் செயல் புரிந்து, சிவபிரான் அடியை அடைதற்கிடமாக விளங்கியது இத்திருநாடேயாகும். பலவகையான பெருஞ் சிறப்புக்களும் அமைந்து விளங்கும் இந்நாடு அவ்வந் நிலங்களில் வாழும் மக்கள் பலரும் தத்தம் திணை ஒழுக்கங்களில் மாறுபடாமல் நடக்கும் முறையுடன் விளங்கும்.

2. திருநகரின் சிறப்பு

தெய்வங்களுள் சிவபெருமான் சிறந்து விளங்குவதைப் போன்றும், பாவினங்களுள் வண்ணப்பாட்டுச் சிறந்து விளங்குவதைப் போன்றும், நன்னெறிகளுள் கொல்லா விரதநெறி சிறந்து விளங்குவதைப் போன்றும், ஊர்களுள் இத்திருவாமாத்தூர் சிறந்து விளங்கும். இத்திருவாமாத்தூர், பம்பையாற்றின் கரையில் அமைந்திருப்பதால் எல்லா வளங்களும் இனிதமையப் பெற்று விளங்கும். உண்மைச் சிவனடியார்களைத் தன்பலோ

அழைத்து, அவர்கட்கு மேலான கதியை அளிக்கும். தேவலோகத்தில் சிறப்பொடு வாழுந் தேவர்களைப்போல் இவ்வூரிற் பல வகுப்பார்களுஞ் சிறப்போடு வாழ்வார்கள். பார்ப்பனச் சிறுமியர் தம் கைக்கழங்குகள் ஏழும், மூன்றென்று கூறும் அம்மானையும் கொண்டு விளையாடுவர். பார்ப்பனர் வாழுந் தெருவில் மறையொலி முழக்கும், வேள்விப்புகையும் மிகுந்து விளங்கும். ஆமாத்தூர் அரசன், தனக்குரிய அளப்பருஞ் சிறப்போடு மகிழ்ந்து வாழ்வான். மேலும், அந்நகரிலே வாழும் வணிகர் வணிக முறைக்கு மாறுபடாமல் வாணிகம் புரிவர். வேளாளர் எல்லாத் தொழில்களும் உழுதொழிலால் நிலை பெறுவதாம் என்பதை உள்ளவாறுணர்ந்து, பயிர்த்தொழிலை நன்கு புரிவர். கரும்பும், நெல்லும், சேம்பும், அழகிய மஞ்சளும் பொருந்திய வயல்கள் மக்கட்குச் செல்வ நலத்தைப் பெருக்கும். அதனல் மக்கள் நால்வகைப் பயனையும் அடைவர். அவ்வாருக அவ்வூரில் துன்பத்தைக் கொடுக்கும் வறுமை நோய் சேரமாட்டாதென்று கூறவும் வேண்டுமோ?

அந்நகரிலே வாழ்வோர், அந்தணர் முதலியோருக்கு அவரவர்கள் விரும்பியதை அளிப்பார்கள். உணவினை இரப்பவர்கட்கு அறுசுவையுணவை வழங்குவார்கள். அவ்வூரிலே வாழும் அறிஞர்கள் 'இந்திர பதவி எய்துவதாயினும் ஓர் உயிரையுங் கொன்றுண்ண ஒண்ணுதென்று' அறிவிலார்கட்கு அறிவுரை வழங்கி, அவர்களை நல்வழியிலே செலுத்துவார்கள். ஊரிலே அமைந்துள்ள மேடைகள் விண்ணையளாவி நிற்கும். அம்மேடையில் திங்கள் உலாவும். மாதர்கள் பெரு மகிழ்ச்சியோடு பலவகையான விளையாடலைப் புரிவார்கள். பொழில்களில் மயில்கள் தோகை விரித்தாடும்.

மண், பெண், பொன் ஆகியவைகளை விரும்பாதவர்களாய் மூவகை ஆசைகளையும் வென்று பக்தி வழியிலே நிற்கும் மெய்யடியார்கள் பொருந்திய மடங்கள் பற்பல அமைந்து விளங்கும். தெருக்கள்தோறும் பழமறையாக மங்களையும் பைந்தமிழ் நூல்களையும் பலர் கற்பர். சிலர் குழலிசை, யாழிசை, முதலியவைகளைப் பயில்வர். சிலர் விற்போர், வாட்போர், முதலியவைகளைப் பழகுவர்.

திருவாமாத்தூரிலே வாழுகின்ற புலவர்கள், பயனிலாத சொற்களைப் பேசுவோருக்கும், தீவினையை உண்டாக்கத்தக்க நூல்களைப் படிக்கின்றவர்கட்கும், பொய் பேசுகின்ற புல்லர்களுக்கும், வீணுகச் சொற்போர் விளைக்கின்றவர்கட்கும், பேரிடியைப் போன்றவர்களாவர்.

கல்வியால் அடையத்தக்கபேறு, சிவபெருமானுடைய திருவடிகளைப் போற்றி, அவன் தாளடைதலே என்பதை அறியாதவர்கள் ஆமாத்தூர் நாவலர்கட்கு இனியராகமாட்டார்கள்.

திருவாமாத்தூரிலே வாழும் வீணைவல்லார், சிறப்புடன் இசைபயிலுந்தோறும், தேவ மாதர்களும், கந்தருவர்களும். அறிவற்றவர்களாகிய நம்து!இருப்பதால் யாது பயன்? என்று கூறி உள்ளம் வருந்நவார்கள்.

திருவாமாத்தூரிலே வாழும் வென்றிவேல் வீரர்கள், போரிடற்குப் பின்னிடமாட்டார்கள். போர் செய்து மாண்டு பொன்னுலகம் புகுதலையே விரும்புவார்கள். இவ்வீரர்களுடைய பெயரைச் சொன்னாலும், அயலூர் அரசர்கள், அறத்தொடு பொருந்தியவர்களாய், மறத்தை நழுவுமாறு விட்டுவிடுவார்கள்.

வீரவாகு தேவரையும், முசுகுந்தச் சக்கரவர்த்தியையும், இராமபிரானையும், அருச்சுனனையும் போன்ற வில்வீரர்கள், திருவாமாத்தூரிலே பொருந்தியுள்ள சிறப்பால் மண்ணுலகமும், விண்ணுலகமும், தானவர் பகையற்றதாய் விளங்கும். இத் திருவாமாத்தூரின் சிறப்புக்கள் இன்னும் பலவாம்.

3. தலச் சிறப்பு

சிவபெருமானுடைய திருவருள் நெறியிற் சென்று, வீடு பேற்றிலே விருப்புடையவராய்த், தீவினைகளை விட்டு நற்பயன் பெற முயல்பவர்கட்கே திருவாமாத்தூரினுடைய பெருமை சிறிது விளங்குவதாம். அழிவற்றவராகிய அழகேசர் எதிரே வந்தாலும் மனிதனே என்று எண்ணுகின்ற அறிவற்றவர்கட்கு எவ்வளவு சொன்னால்தான் என்ன? அதனாற்பயனுண்டாகுமோ? எல்லாம் பொய்யென்று இயம்புவார்கள்.

திருவாமாத்தூர்த் தலத்திற்குக் கிழக்கு எல்லை கடல் வரையிலும் மூன்று யோசனையாகும். தெற்கு எல்லை காவிரி வரை பத்து யோசனையாகும். மேற்கு எல்லை திருவருணைவரை நான்கு யோசனையாகும். வடக்கு எல்லை காஞ்சிமாநகர் வரை எட்டு யோசனையாகும். இது சிவபெருமான் இயம்பிய எல்லையாம்.

திருவாரூர் பிறந்தவர்கட்கே வீடு பேற்றை யளிக்கும். திருத்தில்லைப்பதி கண்டு தொழுதவர்கட்கே வீடு பேற்றை நல்கும். திருவருணை தன்னை எண்ணியவர்களையே நற்கதியிற் சேர்க்கும். காசிப்பதி தன்னிடத்திலே வந்து இறந்தவர்கட்கே பிறவாப்பேற்றை அளிக்கும். திருவாமாத்தூராகிய இச்சிவப் பதியோ இந்நால் நெறிப் பேற்றினையும் ஒருங்கே அளிப்பதாம். இத்தகைய திருவாமாத்தூரின் சிறப்பை எவர் அறிய வல்லார்?

மேற்கூறிய தன்மைகள் நான்கும் ஒருங்கே அமையப்பெற்ற இத்திருவாமாத்தூரைக் காசிக்கு நிகரானதென்றும், இதன் இறைவன் அக்காசிப்பதியின் இறைவன்போல் வான் என்றும் இவ்வூர்ப் பம்பையாருனது கங்கையாற்றிற்கு ஒப்பானதென்றும் வியாச முனிவருஞ் சூத முனிவரும் எவ்வாறோ உள்ளந் துணிந்து உரைத்தனர். நான்கு வகையான வீடு பேற்றினை யளிக்கும் ஒரு சிவப்பதியை ஒரு வகையில் மட்டும் வீடு பேற்றினை யளிக்கும் காசிப்பதியைப் போன்றது என்றுரைத்தது எவ்வாறோ என்று சூத முனிவரைக் கேட்பதற்கு நைமிசாரணிய வாசிகளாகிய முனிவர்கள் துணிந்திலர்போலும்.

யார் ஒருவர் திருவாமாத்தூரைப் புகழ்ந்து பேசினும், மற்றவர்கள் புகழ்ந்து பேசக் கேட்டாலும், மற்றெவ்வகையில் தொடர்பு கொண்டாலும் அவர்களுக்குச் சிறப்புப் பெருகும். ஒருவர் எப்பொழுதும் வேற்றூரில் வாழ்பவராயிருந்தும் தற்பெருமையின் பொருட்டு "நான் திருவாமாத்தூரில் வாழ்பவன்" என்று கூறினும் இறைவன் தன்னுடைய திருவடி நிழலைக் கொடுத்தருள்வன்.

ஆனினங்கட்குத் தாயாக விளங்கும் இச்சிவப்பதியை மதியாதவர்கள் யாவராயினும் அவர்கள் மறைநெறிக்குப் புறம்பானவராவர். திருநீற்றணியைக் கண்டதே தீவினை என்று எண்ணி

அத்தீவினையைப் போக்கிக்கொள்ளுதற்கு மூன்று நாட்பட்டினி கிடந்து வருந்துகின்ற சமணசமயதத்வர்களும் சிறந்த தூய்மையைக் கருதிக் கோமயத்தை விரும்புகின்றார்கள். அறுவகைச் சமயத்தோர்களில் கோமயத்தை விரும்பாதவர்கள் எங்குமே இலர். திருமாலும் சண்டேச நாயனாரும் மட்டும் அறிந்திருந்த ஆன் கூட்டத்தருமையை ஒரு சிறிது என்னிடமுந் தோன்றுமாறு காட்டிப் பிறதலங்களையுங் கடவுளர்களையும் வெறுத்திடச் செய்து, மிக எளிதாக எனையாட்கொண்ட சிவபெருமானார் எழுந்தருளியுள்ள இத்திருவாமாத்தூரையே திருக்கயிலை என்று கூறலாம். எத்தகைய தெங்வமும் ஓர் ஐந்தெழுத்தால் உண்டாகும் வகையை எளிதாக அறிந்துகொள்பவர்கட்கே திருவாமாத்தூர்ச் சிவபெருமான் கனவிலாவது வந்து திருவருள் செய்வான். இஃது உண்மையாகும். இஃது அறிவு மிகுந்த பக்குவர்கட்கே விளங்கும். அறிவற்றவர்கட்கு எவ்வளவு கூறினாலும் உண்மை விளங்காமல் அவர்கள் உள்ளங் கலங்குவார்கள்.

4. தீர்த்தச் சிறப்பு

சிவபெருமான் விரும்பி இனிதுறையும் பதியாகிய திருவாமாத்தூருக்கு அன்மையிற்செல்லும் புண்ணிய நதியாகிய பம்பையாறு, பாம்பையும் மானையும் கொன்றையையும் கூவிள (வில்வத்தையுங் கொண்டு செல்வதால் சிவபிரானைப் போன்றதாம் சங்கையுந் துளவத்தையும் வில்லையும் கணையையும் தண்டத்தையுந் தாங்கிச் செல்வதால் திருமாலைப் போன்றதாம். புனலையும் தருப்பைப் புல்லையும் சந்தனத்தையும் கலைமானையும் ஏந்திச் செல்வதால் நான்முகனைப் போன்றதாம். இவ்வாறு கலைவல்லோர்கள் அவ்வாற்றினைப் புகழ்ந்து கூறுவர். அவ்வாற்றின் சீர்த்தி எலும்பு பெண்ணுருவாகப் பதிகம்பாடிய திருஞான சம்பந்தர் முதலிய பெருமக்களாலும் தமது பனுவல்களில் புகழ்ந்தோதப்பெற்ற சிறப்புடைய தாகும்

அறுபத்தாறு கோடி யெனப் பெறும் எண்ணிக் கையினையுடைய உலகத்துத் தீர்த்தங்களெல்லாம் இதன் கண்வந்து தோயப் பெறுவதால், அவ்வத்தீர்த்தங்களில் ஆடும்பயன்களும்

இவ்வொரு தீர்த்தத்தில் ஆடுவோர் பெறுவர் என்பது திண்ணம். மிகுந்த தீவினையாளர்கள் வந்து அன்பற்றவர்களாய் இந்த ஆற்றில் நீராடினும் இந்திரனும் பெறுதற்கு அரிய பேற்றை அடைவார்கள்.

இன்ன நாளில் இதனில் மூழ்கினுல் இன்ன பயனைப் பெறலாம் என்று நான் விரித்துரைக்காமல் விட்டது சோம்பேறித்தனத்தினுல் என்று நீங்கள் எண்ணுதீர்கள். எந்த நாளில் மூழ்கினுலும் எத்தகைய பயனையும் அடையலாம்; இதனை நீங்கள் உறுதியாக நம்புங்கள். ஆயினுஞ் சில நாட்களைக் குறிப்பிட்டுக் கூறுகிறேன். ஆதிரைநாள், பூசநாள், திங்களைப் பாம்பு பற்றும் (கிரகண) நாள், பிரதோடநாள் ஆகிய நன்னுட்களில் வந்து மூழ்கி நல்லறிவாளர்கள் ஆமாத்தூர்ச் சிவனடியைப் போற்றி அளவிலாத பயன்களைப் பெறுவார்கள்.

கூறிய கருமநூல் விதி முறைப்படி பம்பையாற்றின் கரையில் எள்ளினுல் தருப்பணம் செய்து பிண்டத்தை அவ்வாற்றிற் சேர்த்தோர், தம்முடைய தாய்வழி மரபினரையும், தந்தைவழி மரபினரையும் நரகத்தில் இருந்து விலக்கிச் சுவர்க்கமாகிய தேவர் உலகை அடையச் செய்வார்கள்.

பம்பையாற்றின் கீழ்க்கரையில் திருஞானசம்பந்தப்பிள்ளையார் தமது திருப்பதிகத்திற் கூறியுள்ள பெருமையுடையதான ஆம்பலம்பூம் பொய்கை என்னும் பெயரையுடைய வாவி ஒன்று உள்ளது. இவ்வாவிக்கு வடநூலார் குமுதவதி என்று பெயர் கூறுவர். கங்கையாறு மாதைநகர்ச் சிவபிரானை வழிபடுதற்கு இவ்வாறு திருக்குளவடிவாக வந்து தங்கியிருந்து வழிபட்டதாகவும் பெரியோர்கள் கூறுவர். இப்பொய்கையிற் படிந்தோரும் தம் மனத்தில் பற்றிய மறந்தீரப் புனித முடையோராய்த் தாங்கருதிய மேன்மைகள் அனைத்தையும் அடைந்து மெய்யறி வெய்திய மேலோர் புகும் வீட்டுலகத்தை அடைவார்கள். அப்பொய்கையின் வடகரையில் தாமரைக் கண்ணனுகிய திருமால் ஊழிக் காலத்தில் கண்வளர்தற்காம் தளிர்கள் பல உள்ளதாகிய ஆலமரம் ஒன்று வளம்பெற வளர்ந்தோங்கியுள்ளது.

மதங்கமுனிவர் எழுவரால் உண்டாக்கிய தீர்த்தமும் ஆமாத்தூர் இறைவன் திருக்கோயிலின் உள்ளே (மடைப்பள்ளியின் கண்) அமைந்துள்ளது. இத்தீர்த்தத்தில் நீராடுதலைக்குறியாது அந்நீரிற் சிறிதளவு தலையிலே தெளித்துக் கொண்டாலே மேலான சிவபுண்ணியம் உண்டாகி வீடு பேற்றினைக் கொடுக்கும்.

மற்றும் பண்டைநாளில் பாம்புலகத்தில் (நாகலோகத்தில்) இருந்து வந்ததான துண்டரிகக் கங்கை எனப் பெயர் பெறும். அந்தத் தண்ட தீர்த்தத்தினைத் தொடுதலுமின்றிக் கண்ணினுற் காணப் பெற்ருலே கலியும் வினையுங்கழல வீடுபேறு கிட்டும்.

திருக்கோயிலின் வடமேற்குத் திக்கில் உள்ள ஐயனுர் திருமுன்பு அணிதிகழ் பொய்கை யொன்றுண்டு. அதன்கண் நீராடினுல் ஏவல், பில்லி, சூனியம், பேய் என்னும் இவற்ருல் வருந்துயர் நீங்கப் பெறுவர்.

இனி இத் திருப்பதியினின்றும் ஐந்து குரோசத் தெல்லை வரையில் ஆவின் அடிச் சுவட்டில் தங்கிய நீர்தானும் கங்கை நீருக்கு ஒப்பானதென்று புகழ் தங்கிய முனிவர்கள் புகன்ருர்கள். இனிமேல் எவரேனும் ஒரு புதிய குளத்தை ஆமாத்தூர் எல்லைக்குள் அகழ்ந்தாலும் அதுவுஞ் சிறந்த ஒரு தீர்த்தமாகவே விளங்கும்.

5. மூர்த்திச் சிறப்பு

கோடி யென்னும் அளவின் மேம்பட்ட முனிவர்களும் இணையில்லாத புகழினையுடைய இராமபிரான் முதலியோரும் நாடி வழிபட்ட திருவாமாத்தூர் இறைவன் புகழினை என்னைப் போன்ருரால் அளவிட்டுரைக்க இயலுமோ? அப்பெருமானுடைய புகழினையே பாடிய நான் மறைகளும் வாய் சோர்ந்தன வென்ருல் முற்ற மொழியும் பெற்றியர் யாவர்?

தேன் துளித்தால் ஒத்த சொற்கிழத்தியாகிய கலைமகள் நாதன் நான் முகனும், மான் போலும் விழியினையுடைய மலர் மகள் கொழுநன் திருமாலும், ஊன்றும் மூவிலைச் சூலந்தாங்கிய

உமையம்மையின் கேள்வன் சிவபிரானும் என்னும் இம் மூவரும் ஒன்ருயவடிவமே திருவாமாத்தூர் இறைவன் வடிவமாகும்.

உலகுயிர்களின் பொருட்டு அருட்டிருமேனி கொண்ட சிவ பிரான் உறைதரும்பதிகள் ஆயிரத்தெட்டென அறிந்தோர் கூறுவர். அவற்றுள் எவ்வகைத்தான புனிதத்தையும் எய்தி ஞேர்க்குதவும் ஆமாத்தூர் இறைவன் "முன்னைப் பழம் பொருட்கு முன்னைப்பழம் பொருளாவன்" என்று மூதறி வினை யுடைய மேலோரனைவரும் மொழிவர். இதுவே எமக்கும் உடன் பாடாவதாம். இதனின் மாறுபட்டது எமக்கு ஒவ்வாததாம்.

இத்திருவூரில் உறையுஞ் சிவபெருமான் தன்னைமனம் மொழி மெய்களால் அன்புடன் வழிபடும் மெய்யடியார்கட்கு, அவர் துய்த்து நுகரும் அனைத்துந் தானேயாய் நிற்பன். இவ் வாறு எவ்வெவ்வகையால் யார் யார் எண்ணுகினும் அவ்வவ் வகையால் அவரவர்கட்கு அருளுவன். மூவுலகத் தோரும் தொழுதேத்தும் திருவாமாத்தூர் இறைவன் திருவுருவை மனத் தில் உன்னி வாயினுற் புகழ்ந்தோர் கரை காணுது பண்டு தொட்டு வரும் வினைப்பற்று விடப் பெற்று வீட்டுலகத்தை மேவுவர். சாங்காலத்தில் ஒருவன் 'ஆ' என்று கூறினும், இவன் ஆமாத்தூர் அபிராமப்பண்ணவனுடைய சிறப்புப் பொருந்திய பெயரைச் சொல்லுதற்கு எண்ணி வாயைத் திறந் தான். ஆகவே இவனையாம் பற்றேம் என்று கூறி நமன் தூதுவர் அகல்வர்.

இத்தலத்திலே எழுந்தருளிய முத்தாம்பிகையம்மன் மற் றைத்தலங்களில் எழுந்தருளியுள்ள அம்மன்மார்களைப் போன் றவள் அல்லள். எந்நாளும் அடியவர்க்கிரங்கி அருள் செய்யுந் தாயாவாள்.

இச்சிவப்பதியிலே இராமபிரான் அமைத்தது முதலாக ஒப் பற்ற பல சிவலிங்கங்கள் உள்ளன. அவைகளைக் கூறத் தொடங்கினுல் முடிவு பெருது. ஆனைமுகக் கடவுள் ஆறுமுகக் கடவுள் ஆகியோருடைய வடிவங்களும் பல உள்ளன.

ஆயிரத்தெட்டுச் சிவலிங்கத்திரு உருவங்களும், திருவா மாத்தூரில் உள்ள இறைவன் அருள் வடிவின் உறுப்புக்களாக

வும் அவ்விறைவன் வடிவே அனைத்திற்கும் மூலமாகவும் உள வாம். ஆகவே அவ்விறையருள் வடிவை மனத்தால் நினைந்து வாயாற் புகழ்ந்து வழிபாடு செய்வோர்க்கு வாராத வாழ்வில்லை. எல்லா நன்மைகளும் எளிதில் எய்தப் பெறுவர்.

இத்திருமாதை நகர்க் கோயிற்கண் தாம் தாம் வழி படுந் தேவரே முதற் கடவுளாமென மாறுபட்டு வாதாடும் பிற சமயத் தவரும் உண்மையறிவினை யடைந்து மெய்ந்நெறியறியச் செயும் பொருட்டுத் திருமூர்த்தி சிலை என்னும் பெயரினையுடைய மூர்த்தி ஒன்று உண்டு. இராமனும் இலட்சுமணனும் சீதையும் சபரியுமாகிய நால்வர் வடிவங்களும் ஒரு சேரச்சிலை வடிவாய் உள்ளன. அன்றியும் கன்னியர் ஒன்பதின்மர் (நவசக்திகள்) சண்டேசுரர், நாயன்மார் அறுபத்து மூவர், ஒன்பது கோள்கள் (நவக்கிரகங்கள்) மழைபெய்ய அருள் செய்யும் பாதாள நந்தி என்னும் இவைகளும் மற்றும் பல மூர்த்திகளும் உள்ளன.

இத்தலத்தில் இனிதுறையும் எம்மிறைவியாகிய முத்தாம் பிகை இம்மைப் பிறவியால் எய்தும் பயன் உணராதாரும் எய்தி எமக்கொரு வரம் நல்கு என்றிரந்தால், அவர்க்குத் தன் அருட் குறிப்பால், பல்லி சொற் குறிப்பு முதலிய எதிர் பாரா நிகழ்ச்சி யொலிகளால் வருபொருள் நிமித்தங்காட்டி, அவர் விரும்பிய வாறு மனநிறைவினை அளிக்கும் பேரருட் செல்வியாவாள். அவ் வம்மையின் திருக்கோயிலிலும் பல திருவுருவங்கள் வழிபடு வார்க்கு வரமருளும் பெற்றியனவாய்த் திகழ்கின்றன.

பம்பையாற்றின் கீழ் பால் பனைவனப் பிடாரி என்னும் அம்மை கோயில் ஒன்று உள்ளது. அவ்வம்மை புனிதமற்ற உணவினை விரும்பாள். கொம்பும் வாலும் உள்ள விலங்குகளைக் கொன்று அவற்றின் ஊனையும், பிற உயிர்களின் ஊனையும் உண்ணும் கீழோர் செயலினை ஒறுத்துத் திருத்தும் இயல்பின ளாய்த் தவஞ்செய் துறைவாள்.

தென்மேற்குத் திக்கில் மயிடாசுரனை மடித்த துர்க்கை என் னும் அம்மை உள்ளாள். அவளுடைய பெருமையை உணராத கீழ்மக்கள் அவளுக்கு உயிர்களைப் பலியிட்டுத் தீவினையில் அகப்பட்டுக் கெட்டுழல்வர். அறிவுடையோர் மேன்மையான

பாற் பொங்கல் முதலியன படைத்துச் சிறந்த பயன்களை அடைவர்.

வாயுதிக்கில் ஆனை ஊர்தியையும் சேவற்கொடியையும் உடையவனாய் விளங்குபவனும், சிவனாலும் திருமாலாலும் பெறப் பெற்றவனுமாகிய ஐயன் என்பவன் திருக்கோயில் கொண்டுள்ளான். கொலைத்தொழில் புரிவோரை ஒறுக்கும் பண்பினன் அவன். நாயினை ஊர்தியாகவுடைய வயிரவன் முதலியவர்களின் உருவங்களும் உள்ளன. இத்திருவாமாத்தூர் எல்லைக்கண் உள்ள சிறு மணலும், தானே தோன்றிய சிவலிங்கம் போன்றதாம்.

6. திருவட்டப்பாறை

எழுதொணாத நான்மறையின் பெருமையும், காக்கும் தொழில் பூண்ட திருமாலின் ஆழிப்படையின் கூர்மையும், இளமை தங்கிய காளையை வாகனமாகக்கொண்ட சிவபிரானுடைய மழுப்படையின் ஆற்றலும், இந்திரன் முதலிய ஏனைய தேவர்களின் வளப்பம் பொருந்திய படைகளின் வலியும் ஆகிய இவைகளெல்லாம் ஒன்று சேர்ந்து ஓர் உருக்கொண்ட தன்மையை உடையது மாதைமாநகர்க் கோயிலின்கண் உள்ள திருவட்டப்பாறை என்னும் தெய்வத் தன்மையுடைய கல்லுருவம்.

திருவட்டப்பாறை என்னும் பெயரினையுடைய அப்பாறை இன்ன காலத்தில், இன்னார் பொருட்டாக, இன்ன தேவரால் இயற்றப்பட்டதென்னுஞ் செய்தி தெரியவில்லை. அப்பாறையின் தோற்றத்திற்கு யான் ஈண்டொரு பொய்க்கதையைப் புகல்வதற்குத் துணியவில்லை. அப்பாறையின் புகழ் ஏழு கடல் நீரினும் அதிகமாகும். உண்மையை உணர்தற்கு அஃது உலகத்தில் ஒருசிறந்த துணையாக விளங்குவதாகும். அப்பாறை பொய்ம்மொழி புகன்றவர்களைத் தீக்குழியில் விழுந்த புழுவை அத்தீ வருத்திக் கொல்லுதலைப்போல், தான் வருத்திக் கொல்லும் தன்மையுடையது. அப்பாறையின் தன்மையை அறிந்த மெய் சொல்வோர் கூட, அப்பாறையினிடஞ் செல்லுவதற்கு அஞ்சுவர். இழிந்த மக்கள் இழித்துரைத்துத் தன்னைப் பழித்தாலும்.

அதனைப் பொறுத்துக்கொண்டிருக்கும். பொய் சொன்னால் சிறிதும் பொறுக்கமாட்டாது. மிகக் கடுமையாக வருத்தும்.

ஆயிரஞ் சாட்சிகளைக் கேட்டுங்கூட உண்மையை உணர முடியாத பொய் வழக்குகளை யெல்லாம், அப்பாறை நொடியில் தீர்த்து, அரசர்கட்கு மிகுந்த மகிழ்ச்சியை உண்டாக்கும். அப்பாறையின் முன்னர்ப் பொய் சொல்வார் தேவர்களானாலும் மீளாத துன்பப் பெருங்கடலில் வீழ்ந்து வருந்தி இறப்பார்கள்.

தெய்வம் உண்டென்னும் நம்பிக்கையுடையவர்கள் அங்கு போய்ச் சிறிது பொய்ம்மொழி புகன்றாலும், இனிமேல் இவர்கள் உயிர் வாழார் என்று கண்டவர் கூறுமாறு கடுமையான துன்பத்தை உடனே ஒருசேரக் கொடுக்கும். பொய்மையான கொள்கைகளையுடைய அநீசுரவாதியை (கடவுளில்லை யென்பவரைப், போன்றவர்களும், அங்கு சென்று பொய்ம் மொழி புகன்றால் அவர்களையும் அப்பாறை உலகத்தார் எல்லோரும் உணருமாறு கொல்லும்.

அத்திருவட்டப்பாறையின் எதிரே பொய்ம் மொழிகளைப் புகன்று கண்ணிழந்தவர்களும், தலை வெடிக்கப் பெற்றவர்களும் பாம்பு கடிக்க மாய்ந்தவர்களும் எண்ணற்றவர்களாவர். உண்மை புகன்று தம் துன்பத்தை ஒழித்தவர்களும் பலராவர்.

நீண்ட வாழ்நாளை நான்முகனுற் பெற்ற பெருமையுடையவர்களாக இருந்தாலும், அவர்கள் அவ்வட்டப்பாறையின் முன்பு பொய்ம்மொழி புகன்று விடுவார்களாயின், அவர்களுடைய வாழ்நாளின் ஆற்றல் தொலைய, அவர்களையும் ஓராண்டுக்குள் கெடுத்துவிடும். அப்பாறையினிடத்தில் இறைவன் பார்வையும் இறைவி பார்வையும் இடைவிடாது அமைந்திருக்கும்.

வாலியைக் கொல்வதற்கு முன் இராமபிரானும் சுக்கிரீவனும் அநுமான் சான்றாக நட்பானபோது உடன்படிக்கையை அப்பாறைக்கு முன்னர்ச் செய்துகொண்டனரென்று அறிந்தோர் புகல்வர். இவ்வுண்மைக் கல்லினிடத்து நிகழ்ந்த நிகழ்ச்சியொன்றையும் இங்கே கூறுவாம்.

திருவாமாத்தூருக்கு வடக்குத் திக்கிலே ஒரு மனிதன் இருந்தான். அவன் மிகவும் பொல்லாதவன். நாளும் சூதாடு

பவன்; பொய்ம்மொழி புகல்பவன். அவன் இந்த உண்மைக் கல்லை (சத்தியப்பாறையை) தான் வென்றுவிட எண்ணினான். அவனுக்கோர் இளைய தம்பியாக உடன் பிறந்தான் இருந்தான். அவர்களுடைய முன்னோர்கள் அவர்கட்கு மிகுந்த பொருள் தேடி வைத்திருந்தனர். கொடியவனாகிய மூத்தோன் தன் தம்பிக்குத் தன் முன்னோர்கள் தேடிவைத்த பொருளில் பங்கு கொடாமல் வஞ்சித்து எல்லாவற்றையுந் தானே கவர்ந்து கொள்ள எண்ணினான். இருந்த பொருள்களை யெல்லாம் விற்று இரத்தினமாக மாற்றினான். பொருள்களைத் தன்னுடைய தம்பியோ மற்றவர்களோ காணுமாறு சிறிதும் விட்டுவைக்கவில்லை. நீண்ட தடியொன்றை உள்ளே துளையுடையதாக அமைத்து இரத்தினத்தை அத்தடிக்குட் பொதிந்து தன்னுடைய கையிலே வைத்துக்கொண்டு திரிந்தான்.

ஊரார்கள் இளையவனைப் பார்த்து "உனக்குரிய பொருள்களையெல்லாம் உன்னுடைய அண்ணன் கவர்ந்துகொண்டான். நீ பேசாமற் பார்த்துக்கொண்டிருக்கிறாயே! உனக்குரிய பொருளைக் கைப்பற்றுவாயாக" என்று அறிவுரை புகன்றனர். ஆகவே பின்னவன் முன்னவனைப் பரர்த்து "நம்முடைய முன்னோர்கள் தேடிவைத்த பொருள்கள் எங்கே? என்னுடைய பாகப் பொருள் உன்னிடம் உளதாகில் கொடு இன்றேல் திருவாமாத்தூர்த் திருக்கோயிலின்கண் உள்ள திருவட்டப் பாறையின் முன்பு வந்து "நான் உன்னுடைய பொருள்களைக் கைப்பற்றிக் கொள்ளவில்லையென்று உறுதிமொழி கூறு" என்று சொல்லி அழைத்தான்.

முன்னவன் பின்னவனைப் பார்த்துத் "தம்பி! என்னிடம் பொருள் இல்லை. எல்லாவற்றையும் நீதான் கைப்பற்றிக் கொண்டாய் திருவட்டப்பாறையிடத்திற்கு வா! நான் உண்மையைக் கூறுகிறேன்" என்றுரைத்தான். இருவருஞ் சாட்சிக்குச் சிலரை அழைத்துக்கொண்டு திருக்கோயிலில் உள்ள திருவட்டப்பாறையிடத்திற்குச் சென்றனர். முன்னவன் ஒரு சூழ்ச்சியை உள்ளத்தில் எண்ணிக்கொண்டுதான் இந்த வஞ்சனையில் இறங்கினான். மூத்தவன் திருவட்டப்பாறையைத் தொட்டுக்கும்பிட்டு உண்மை மொழியை உரைக்கத் தொடங்கு

வான் போல் நடித்து, தன்கையில் இருந்த பொருள் பொதிந்த தடியைத் தன்னுடைய தம்பியிடம் நீட்டித்'' தம்பி! இத்தடியைக் கையிற்பிடி, நான் பாறையைத் தொட்டுக்கும்பிட்டுச் சத்தியஞ் செய்கிறேன் '' என்ருன். சூழ்ச்சியை உணராத இளையவன், அவ்வாறே தடியைத் தன்னுடைய கையில் வாங்கி வைத்துக் கொண்டான். மூத்தவன் பாறையைத் தொட்டுக் கும்பிட்டு '', முன்னேர்கள் தேடிவைத்த பொருள்கள் எல்லாம் என்னுடைய தம்பியிடந்தான் இருக்கின்றன. என்னிடஞ் சிறிதும் இல்லை'' என்று உரைத்துச் சத்தியஞ் செய்தான். பிறகு தடியைத்தான் பெற்றுக்கொண்டு அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டான்.

மூத்தவன் பொய்மொழி புகன்ற போது, அவனுடைய கண் கெடவில்லை. வாய் வழியாக உதிரத்தைக் கக்கவும் இல்லை. இதற்குக் காரணம் யாதோ என்று உடனிருந்தவர்கள் திகைத்தனர். இளையவனே, திருவட்டப்பாறையைப் பார்த்து ''உன்னுடைய உண்மையும் பொய்யாகப் போய் விட்டதோ? என்று சொல்லிக் கீழே விழுந்து புரண்டு அழுதான். பிறகு மற்றவர்களோடு அவ்விடம் விட்டுப் போனுன்.

மூத்தவன் இருகுரோச தூரம் போயிருப்பான். அவன் தன்னேடிருந்த மற்றவர்களைப் பார்த்து ''திருவட்டப் பாறைத் தேவதை சீறிக்கொத்தி விடுமோ ?'' என்று நகைச்சுவையோடு பேசினுன். அப்பொழுது ஒரு பெரிய கரிய பாம்பு அவ்விடத்தே தோன்றி அவனைக் கொத்தியது. அவன் அக்கணமே கீழே விழுந்து மாண்டொழிந்தான். அம்பாம்பின்வால் அம்பிகையின் திருவடிகளில் உள்ளது. தலை ஒரு கல்வடிவாகியது. இக்கல்லையே முந்திய வட்டப்பாறையின் துணை வடிவமாகவும் அந்த நாகவடிவை நாகாம்பிகை எனவும் தற்போது வழங்குகின்றனர்.

அன்று தொட்டு அங்கு நடந்துள்ள கதைகள் ஓராயிரம் உரைக்கலாம். அண்மைக் காலத்தே அங்கு நிகழ்ந்த நிகழ்ச்சியொன்றையும் ஈண்டு இயம்புகின்ரும். இதைப் பிற்காலத்தார் பொய் யென்பராயின் அதற்கும் அத்தெய்வமே சான்ருகும்.

மாதையூர் வட்டப் பாறை நினைவாக இக்காலத்தே நாகாம்பிகையென்ற சிலையின் பால் அன்பர்கள் பலர் ஒரு செவ்வாய்க்

கிழமையில் தம்முடைய உரிமைப் பொருளைக் கொண்டு கொலை யிலாதனவாகிய தூய பண்டங்களைத் தொகுத்து வழிபாடு செய் தார்கள். அப்பொழுது அவ்வழியிலே மக்கள் சிலர் நாடகத் தில் நடிக்கச் சென்றனர். அவர்களில் தீயவன் ஒருவன் " இந்தக் கல்லுந் தெய்வமாகுமோ?" என்று எள்ளி நகை யாடியதோடு இழி சொற்கள் பலவற்றைப் புகன்றான்.

இழித்துரையாடியதைக் கேட்டோர் மனந்திகைத்தனர். இகழ்ந்துரைத்த தீயோன் அவ்விடத்தை விட்டுச் சென்றான். சிறிது தொலை செல்வதற்குள் கொடிய பாம்பொன்று சினமிக்க தாய்ச் சீறித் தீயோன் செல்லும் வழியைத் தடுத்தது. அப் பொழுது அங்குவந்த முதியவன் ஒருவன் நிகழ்ந்ததை அறிந் தான். அவன் இகழ்ந்ததைக்கடிந்தான். வட்டப்பாறையின் பெருமையை அவனுக்கு விளக்கினான். அத்தீயோன் மக்கள் வழிபட்டுக் கொண்டிருந்த இடத்திற்குச் சென்று அன்போடு அதனை வணங்கினான். திருநீறு பெற்று அணிந்தான். பிறகு தான் செல்ல வேண்டிய ஊர்க்குச் சென்றான். ஆயினும் அன்றுதான் செய்யவேண்டிய நடிப்பிற்குரியவேலையைச்செய்து நடிக்க முடியவில்லை. கொடிய காய்ச்சல் நோயோடு தன்னு டைய ஊருக்குத் திரும்பினான். அதனால் பல நாள் வருந்தி னான். தான்புரிந்த ஒரு தீவினைக்கு எண் மடங்காய்ப் பரிகாரங் கள் செய்து உயிர் பிழைத்தான்.

7. பசுக்கள் வழிபாடு

முன் காலத்தில் ஆனினங்கள் கொம்பில்லாதவைகளாகப் படைக்கப்பட்டன. ஆகவே அவைகள் மற்றைய தீய விலங்கு களால் வருத்தப்பட்டதோடு இரையாகவுங் கொள்ளப்பட்டன. இதனால் உளங்கவன்ற ஆனினங்கள் தாம் கொம்புகளைப் பெறு தற்கு விரும்பித் தம் இனமாகவுள்ள நந்திதேவரையும் காமதேனு வையும் எண்ணித் தவம் புரிந்தன. அவையிரண்டும் ஆனினங் களை அடைந்து தவமியற்றுதற்குரிய காரணத்தை வினாவின. ஆக்கள், தாங்கள் கொம்புகளை விரும்புஞ் செய்திகளை அவை கட்குக் கூறின. அவைகள் உங்கள் இனமானமைபற்றி எங்களுக் கும் கொம்பிருக்க வேண்டியது இன்றியமையாததாகும். பிறவித்

தோற்றத்தைமாற்றியளிக்கும் பெற்றி இறைவன் ஒருவனுக்குத் தான் உள்ளதேயன்றி எங்களால் அச் செயலை முடிக்க இயலாது. ஆகவே நாமெல்லோரும் இறைவனை நோக்கித் தவம் புரிவோம் எம் பின்னே வாருங்கள்" என்று அழைத்துக் கொண்டு பம்பையாற்றின் வட கரையில் இருந்த வன்னி வனத்தை அடைந்தன. பம்பையாற்றில் நீராடித் தக்கமலர் களைக் கொண்டு சுயம்புலிங்கவடிவான இறைவனை வழிபட்டுத் தம்முடைய விருப்பத்தை நிறைவேற்றுமாறு வேண்டிக்கொண்டு அவ்விடத்தே தவஞ்செய்திருந்தன.

ஆக்களின் செயல் இவ்வாறிருக்கும்போது திருக்கயிலையில் சிவபெருமானது திருக்கோயிலில் வாயிற்காவல் இல்லையாகியது. இதையுணர்ந்த இறைவன், இறைவியோடு விமானம் ஒன்றில் நந்திதேவரும் ஆக்களும் தவஞ்செய்து கொண்டிருந்த இடத் திற்கு எழுந்தருளினர். அருச்சனை முதலியவைகளை முடித்து யோகத்தில் இருந்த நந்திதேவர், இறைவனையும் இறைவியை யும் போற்றி வழிபட்டார். தம்முடைய விருப்பத்தையும் மற் றைய ஆக்களின் எண்ணத்தையும் வெளியிட்டார். இறைவன் நந்தி தேவருக்கும் காமதேனுவுக்கும் பிற ஆக்களுக்கும் கொம்பு கள் உண்டாகுமாறு திருவருள் புரிந்தார். நந்திதேவரைத் தம்முடைய ஊர்தியாகக் கொண்டார். தாம் ஏறி வந்த விமானத் தைச் சந்திரனுக்கு வழங்கினர். அன்று முதல் இறைவன் யாண்டு செலினும் நந்திதேவர் மீதே செல்லலானர். ஆக்களுக் குக் கொம்புகள் முளைத்தன. ஆக்கள் பூசித்து வழிபட்ட இலிங் கத்தின் உச்சியிலும் கொம்புச் சுவடுகள் விளங்கின. நான் முகன் மாயன் முதலியோர் அவ்விடத்திலே திருக்கோயிலை உண் டாக்கினர். அவ்வூர் அன்று தொட்டுச் சிறந்து விளங்கலா யிற்று. பாணினி முனிவர் வடமொழியில் அவ்வூரைக் கோமா துருபுரம் என்றார். அகத்தியர் தென்மொழியான தமிழில் ஆமாத்தூர் என்றார். அவ்விடத்தே தேவரும் பிறரும் சிவ பெருமானை வணங்கித் தவஞ் செய்து தாம் வேண்டியவைகளை யெல்லாம் வேண்டியவாறே பெற்று மகிழ்ந்தனர்.

எந்தவூர்ப் பசுக்கள் இளைத்து மெலிந்து நோய் முதலியவை களால் வாடியிருந்தாலும், இவ்வூர்ப் பசுக்கள் செந்நிலப் பசும்

புல்லை நன்குமேய்ந்து பம்பையாற்றின் தண்ணீரை நன்கு குடித்து, தேவர் உலகத்துப் பசுக்களைப் போல் சிறந்து விளங்கு வனவாம். அந்நாள் தொட்டு அவ்வூரிலே ஆனினங்கள் மிகவும் பெருகிச் சிறந்து வாழ்கின்றன.

தேவர்கள் ஒவ்வொருவருக்கும் தனியே நகரமுள்ளன. எங்கட்கு ஒருதலம் வேண்டுமென இறைவனிடம் விண்ணப்பித்தன. அவ்வாறே "கோபுரம்" என்னுமிடத்தை வழங்கினான். அதில் ஆக்கள் செம்மையுடன் வாழ்கின்றன.

8. அம்பிகை வழிபட்டது

ஒரு நாள் சிவபெருமான் இறைவியோடு கைலாயத்தில் இருந்து காளை வாகனத்திற் புறப்பட்டு விண் வழியே சென்றனர். அப்பொழுது ஆங்கோர் மலைச் சாரலில் அப்பொழுதுதான் பிறந்த குழந்தையொன்று நாவரளுமாறு கூவி அழுதுகொண்டு கிடந்தது. அதனைப்பார்த்த இறைவி, இறைவனைப் பார்த்து, "சுவாமி! நாம் இக்குழந்தையை இப்படியே விட்டுவிட்டுச் செல்லுதல் தக்கதன்று, அது நம்முடைய அருளுடைமைக்கு ஏற்றதன்று" என்று உரைத்தாள்.

பின்னும், இறைவி இறைவனைப் பார்த்து, "சுவாமி! இக் குழந்தையைப் பெற்றவள் யார்? அவள் இதனை இவ்வாறு போட்டு விட்டு எங்கே போய் விட்டாள். இக் குழந்தை இனி மேல் எவ்வாறு பிழைக்கும்? இதனை எனக்குக் கூறியருள் வீராக" என்று வேண்டிக் கொண்டாள். இறைவன் இறைவியைப் பார்த்து' "உமையே! காமவெறிமிஞ்சிய அரக்கி ஒருத்தி இதனை இவ்வாறு பெற்றுப் போட்டு விட்டுத் தனக்கு விருப்பமுள்ள வேறோர் இடத்திற்குப் போய் விட்டாள். இக் குழந்தையை நம்முடைய திருமால் காப்பாற்றுவான்" என்று மறுமொழி கூறினர்.

இதனைக் கேட்ட இறைவி "அத்திருமால் என்னுடைய தமையனாராவர். யானுந்திருமாலினுடைய கூருகையால் இக் குழந்தையைக் காப்பாற்றினல் அல்லாமல் உம்மொடுவரேன்" என்று கூறினள். இறைவன் அக்குழந்தையை ஆருண்டுக்

குழந்தையாகச் செய்தார். இறைவி இதனோடு அமையாமல் "இவ்வரக்கர்குல மைந்தர் எல்லோருக்கும் நல்வாழ்வினை நல்குவீராக" என்று கூறினாள். இதனைக் கேட்ட இறைவன் உமையே! அவ்வாறு செய்தல் கூடாது. அப்படி நல்வாழ் வளிக்கின் தேவர்கட்கும் பிறர்க்குந் தீமையைப் புரிவர்" என்று கூறித்தடுத்தார். இறைவி, இறைவன் இயம்பியதை ஏற்காது பிடிவாதங் காட்டினாள். ஆகவே இறைவன் இறைவியின் கருத்தை மறுக்க முடியாமல் அரக்கர்கட்கும் நல்வாழ்வு ஏற்படு மாறு செய்தார். பிறகு இருவரும் கைலையை அடைந்தனர். இவ்வாறு அரக்கர்கட்கு நல்வாழ்வு ஏற்படவே அவர்கள் தேவர் கட்கும் பிறருக்கும் தொல்லை விளைக்கலாயினர். தேவர்கள் துன்பக் கடலில் அகப்பட்டு வருந்தினர். திருமால் முதலிய தேவர்கள் கூட்டம், அடைந்த தொல்லைக்கு அளவில்லை. பிறகு தேவர்களுடைய வேண்டுகோட்படி இறைவன் முருகக் கடவுளை உண்டாக்கினர். இதனால், உமையவள் இறைவனோடு மாறுபட்டு வன்சொற்கள் சிலவற்றைக் கூறினாள். ஆதலால் சிவபெருமா னுக்கு மிகுந்த சினம் உண்டாகியது. உமையே நீ தேவர்கள் துன்பப்படுமாறும் அரக்கர்கள் சிறப்படையுமாறுஞ் செய்தாய். இதனால் தீவினையுண்டாகி அஃது உன்னைப் பற்றியது. ஆகவே நீ என்னுடைய அருகில் இருக்கத்தக்கவள் அல்லை. எங்கே னுஞ்சென்று மாதவஞ் செய்து பிழைப்பாயாக!" என்று கூறினர்.

இதனைக் கேட்ட இறைவி, வருந்தி நொந்தாள். இறை வனைப் பணிந்து, 'நான் எங்கு போய் எவ்வகையானமாதவத் தைச் செய்து எக்காலத்திலே உம்மையடையப் போகிறேன். உம் வடிவத்திலேயே பங்குபெற்ற என் மீது, இவ்வாறு சினங் கொள்வது அறமாகுமா? நீர் கங்கைமாதோடு வாழ்ந்திரும் நான் போகிறேன்" என்று சொல்லி வருந்தினாள்.

இறைவன் அருள் கூர்ந்து, "நந்தியும் பசுக்களும் நம்மை வழிபட்டுப் பேறுபெற்ற இடமான திருவாமாத்தூருக்குச்சென்று உன்னால் இயன்றவாறு வழிபட்டிரு! நான் வந்து அருள் புரிகிறேன்" என்று கூறினர். பிறகு இறைவி கயிலையை நீங்கித் திருவாமாத்தூரையடைந்து இறைவனை வழிபட்டுக்

கொண்டிருந்தாள். இறைவன் எழுந்தருளித் திருவருள் வழங்கினர். பழமை போல் தம்முடைய பாகத்தில் அமர்ந்திருக்கச் செய்தார்.

9. முனிவர்கள் வழிபடுதல்

சாலோக முதலாகச் சொல்லப்பெறும் நாற்பதவிகளேயும், தன்னே வழிபடுவோர்க்கு நல்கும் ஆமாத்தூர்ப் பெருமான், ஆவினங்களுக்கு அருள் செய்த வரலாறு எவ்வுலகத்தும்பரவின.

சமயப்பிணக்கில் மயங்காதவரும், ஒழுக்க நியமமிக்கவரும், ஆகம விதிப்படி நடப்பவரும்,தெய்வம் ஒன்றென்றுணர்ந்தவரும் கொலேபுலேயிலிணங்காதவரும் ஆகிய தவசீலர்கள் பலர் கூடினர் ஆமாத்தூருக்கணித்தாக ஒரு கோடியென்ற ஊரையும், சிவத்தளியையும் அமைத்து வழிபட்டனர். இறைவனுகிய அழகிய நாதர் உமையம்மையோடு காட்சி யீந்தனர்.

முனிவர்கள், பிறவிாதனேயற்றபேறு யாதுதரினும் பெறக்கடவோமென வேண்டினர். பலதிறப்பட்ட பதவிகளிருப்பினும் நிலேயுற்றன ஆகா. நமது இலிங்கவடிவுள் ஒன்றுபடும் நிலேயே மேலானது என்றனர். பின் அவர் யாவரும் ஆமாத்தூர்ப் பெருமானது சிவலிங்கத் திருவுருவில் ஒன்று பட்டு முத்திப் பேறுற்றனர்,

10. எழுமுனிவர் பூசித்தது

அகத்தியர், வசிட்டர், துருவாசர், பிருகு, பராசரர், கௌசிகர் முதலிய முனிவர்கள் இறைவனே வழிபட்டு மேலான பதவியை அடைய எண்ணினர்கள். எப்பதியில் வழிபாடு செய்தால் பயன் எளிதாகக் கிடைக்கும் என்று எண்ணமிட்டார்கள். இறைவன் திருவருளால் திருவாமாத்தூர்ப்பதியே விரைவிற் பலனளிக்கத் தக்கது என்று உணர்ந்தார்கள்.

எல்லோரும் தத்தம்பதிகளே நீங்கித் திருவாமாத்தூரை யடைந்து பம்பையாற்றில் முழுகினர்கள். செய்ய வேண்டிய நாட்கடன்களேயெல்லாஞ் செய்து ஆமாத்தூர் அண்ணலேப்

பணிந்து போற்றினார்கள். பிறகு நாள்தோறும் வழிபட்டுக் கொண்டு அவ்விடத்திலேயே தவஞ்செய்து கொண்டிருந்தார்கள். முதலில் உணவை நீத்துக் காய்கனிகளை அருந்தினார்கள். பிறகு சருகையுண்டார்கள். பின்னர்க் காற்றையே நுகர்ந்து கடுந்தவம் புரிந்தார்கள்,

இவர்களுடைய தவத்திற்கு மகிழ்ந்த அபிராமேசர், மழவிடை மேல் எழுத்தருளிக்காட்சி தந்தார். அப்பரமனை முனிவர்கள் பலவாறு போற்றிப் புகழ்ந்தார்கள். முனிவர்கள் தங்கட்கு இன்னவரம் வேண்டுமென்று வாய்திறந்து கேட்பதற்குமுன் இறைவன் அவர்களைப் பார்த்து, "இனிமேல் நீங்கள் இறந்து பிறக்க மாட்டீர்கள். எந்தத் தேவ பதவியையும் எளிதில் அடைந்து மகிழ்வீர்கள். இனிமேலுந் தவஞ் செய்ய வேண்டியதில்லையென்று கூறிவிட்டு மறைந்தார். முனிவர்களும் தத்தம் இருப்பிடத்தை யடைந்திருந்தார்கள்.

11. ஆனைமுகக் கடவுள் வழிபட்டது

ஆனைமுகக் கடவுள் திருவாமாத்தூரில் எழுந்தருளிய இறைவனைப் பணிந்து பூசிக்க எண்ணினார். தேவர்கள் மட்டும் காணத்தக்கவடிவோடு செல்லாமல், உலகத்து மனிதர்கள் எல்லாருங் காணுமாறு தொண்டர்கள் பலர் தம்மைச்சூழப் புறப்பட்டார். இவர் சென்ற ஊர்களில் இருந்த மக்களிற்பலர் ஆனைமுகக்கடவுளைப் போற்றி வழிபட்டார்கள். பலரோ, இஃதென்னமோ மாயமென்று இகழ்ந்து வணங்காமலிருந்தார்கள்.

ஆனைமுகக் கடவுளைக் கண்டு வணங்கிய அன்பர்களிற் சிலர், ஆனைமுகக் கடவுளைப் பார்த்து, "தவஞ் செய்தாலுங் காண்டற்கரியதாங்கள், தீவினையாளருங்காணுமாறு வந்துள்ளீர்கள் ! இதற்குக் காரணம் யாது ? கூறியருள வேண்டும்" என்று சொல்லி வேண்டிக் கொண்டார்கள். ஆனைமுகக் கடவுள் அந்த அன்பர்களைப் பார்த்து "இமயமலைக்கு அருகே உள்ள ஒரு கோயிலில் பூசை செய்து கொண்டிருக்கும் ஓர் அருச்சகனுடைய மகன் நான். ஆனைமுகக் கடவுளுடைய திருவருளினால் எனக்கும் அத்திருவுருவம் வந்துவிட்டது. நான் ஆமாத்தூரில்

எழுந்தருளிய இறைவனைப் போற்றி வழிபாடு செய்யவேண்டும் என்னும் அவாவினுல் இங்கு வந்துள்ளேன்'' என்று கூறினர். அவரவர் தத்தம் பக்குவ நிலைக் கேற்றவாறு உண்மையை உணர்ந்து கொண்டார்கள்.

ஆனைமுகக் கடவுள் ஆமாத்தூர் இறைவனைப் பூசைசெய்து போற்றினர். இறைவன் தோன்றி யாது வேண்டுமெனக் கேட்டார். இக்கலியுகத்தில் நாளும் உம்மைப் பூசிக்க விரும்பினேன் என்ருர். அப்படியே ஆக எனக் திருவருள் செய்தார். பிறகு ஆனைமுகக் கடவுள் அங்கிருந்த தமது சிலையொன்றுட் புகுந்து மறைந்தார். அவ்விடமே எழுந்தருளி யிருந்து நாளும் அன்பர்கட்குத் திருவருள் நல்கினர். எமனுடைய புதல்வனகத் தோன்றிய அனலாசுரனென்னும் அரக்கனையும் திருமால்வேண்டியதற்கிசையவென்று தேவர்கட்கு மகிழ்ச்சியை அளித்தார். திருமால் வேண்ட அசுரனையட்ட காரணம் பற்றி மால் துயரம் தீர்த்த விநாயகர் என்ற பெயர் வந்தது.

12. முருகக்கடவுள் வழிபட்டது

முருகக்கடவுள், திருவாமாத்தூரில் எழுந்தருளிய இறைவனை வழிபட்டு அருள்பெற எண்ணினர். திருவாமாத்தூரையடைந்து ஆகம முறைப்படி வழிபட்டார். முருகக்கடவுளுடைய வழிபாட்டிற் கிரங்கிய சிவபெருமான், உமாதேவியாரோடு எழுந்தருளிக் காட்சி தந்தார். காட்சி தந்த பரமனைக் கந்தவேள் போற்றினர். முருகக்கடவுளுக்கு அருள்புரிய எண்ணிய இறைவன் மூலப் பிரகிருதியை மயிலாகச் செய்து கொடுத்தார். தன்னுடைய ஞானசத்தியை வேற்படையாகச் செய்து கொடுத்தார். நாதசத்தியைச் சேவற்கொடியாக்கித் தந்தார். உனக்கு இனி மேல் எத்தகைய குறையும் ஏற்படமாட்டாது என்று கூறித் திருவருள் புரிந்தார். முருகக்கடவுளுக்கு வேறு மயில்களும் உள வெனினும் ஆமாத்தூர் இறைவன் அளித்த மயிலே ஒப்பற்றதாகியது. வேறு வேலுஞ் சேவலும் உளவாயினும் அவைகளினும் ஈண்டு இறைவன் வழங்கியவைகளே சிறந்ததாக மிளிர்ந்தன. இறைவனுடைய அருளைப்பெற்ற முருகக்கடவுள் தாரகன்

சிங்கமுகன் சூரன் முதலியோரைப் போரில் வென்று சிறப்புடன் விளங்கினார்.

13. நாரதர் வழிபட்டது

நாரதர் ஒரு நாள் நான்முகன் எதிர்சென்றார். நான்முகனையும் கலைவாணியையும் போற்றிப் பணிந்தார். கலைமகள், அழகிய யாழ் ஒன்றை நாரதருக்கு உண்டாக்கிக் கொடுத்தாள். இனிமையாக இசைபாடும் வன்மையை இருவரும் நாரதருக்கு நல்கினர். பிறகு நாரதரைப்பார்த்து, "இன்னும் வேறெவற்றையேனும் விரும்புவாயானால் மனிதர்கள் வசிக்கும் தமிழ்நாட்டில் உள்ள திருவாமாத்தூர் இறைவன் திருவடிகளைப் போற்றிப் பணிவாயாக" என்று உரைத்தனர்.

நாரதர் உடனே புறப்படுத் திருவாமாத்தூரை யடைந்தார். அங்கெழுந்தருளிய இறைவனைப் பல மலர்கொண்டு வழிபட்டுப் போற்றினார். இறைவனுடைய காட்சியை விரும்பி இனிமையாக யாழ் வாசித்தார். நாள்கள் பலவாகியும் இறைவன் காட்சி கிடைக்கவில்லை. நாரதர் உள்ளம் வருந்தினார். பிறகு இறைவன் தோன்றிக் காட்சி தந்து உன்னுடைய விருப்பம் யாது உரைப்பாயாக" என்று திருவாய் மலர்ந்தருளினார். நாரதர் இறைவனை வணங்கி எல்லா உலகங்களுக்கும் எளிதாகச் சென்று வரும் பெருமையும், தங்களை எந்நாளும் வழிபடுஞ் சிறப்பும், எல்லோரும் போற்றத்தக்க மிக்க புகழும் நல்கியருளவேண்டும்" என்று சொல்லி வேண்டிக்கொண்டார். இறைவன் "உன் விருப்படியே வழங்கினோம். இனிமேல் நாம் கூத்தியற்றும் போது ஆங்குவந்து இசை பாடுவாயாக" என்று திருவாய்மலர்ந்தருளினார். அந்நாள் முதல் நாரதருடைய புகழ் யாங்கணும் மிகுதியாகப் பரவியது. இவர் எல்லா உலகங்களினும் சுற்றலானார். இவர் எல்லோர்க்கும் பொதுவாக நடந்து கொள்ளத்தக்க இயற்கையுடையவராக இருந்தமையின் இவரை எல்லோரும் போற்றலானார்கள். முருகக்கடவுளுக்கு வள்ளியம்மையாரைத் திருமணஞ் செய்துவைத்த சிறப்புக்கூட இவரைச் சேர்ந்ததுதான். இவர் எல்லா உலகங்களினுஞ் சுற்றி அங்கங்குள்ளவர்கட்குச் செய்திகளைச் சொல்லிக்கொண்டு செல்

வார். அவைகளுட் சில பிறருக்குத் தீமை விளைவிப்பனவாகவும் முடியும். அதனுல் இவரைக் கலகப் பிரியர் என்றுஞ் சிலர் கூறுவர். ''யதார்த்தவாதி வெகுசன விரோதி'' என்பது பழமொழியன்றோ!

14. உரோமசர் வழிபட்டது

ஒருநாள் நான்முகன் சத்தியலோகத்தில் வீடுபேற்று நெறியை முனிவர்கட்குப் போதித்தான். இதனைக் கேட்ட முனிவரர்கட்கு ஆணவம் உண்டாகிவிட்டது. ஒவ்வொருவரும் தாங்கள் வீடுபேறடைதற்கு உரியவர்களாகிவிட்டதாகத் தருக்கிச் சொற்போரிட்டார்கள். முனிவர்களுடைய மடமையைக் கண்ட நான்முகன் அவர்கட்கு நல்லறிவு புகட்டவேண்டும் என்று திருவுளத்தில் எண்ணினன். தன்னுடைய தலையில் இருந்து வெள்ளியமயிர் ஒன்றைப் பறித்து அதனை முனிவராக்கி விட்டான். அம்முனிவர் உரோமத்தினின்றுந் தோன்றியபடியால் உரோமசர் என்று பெயர் உண்டாகியது. அந்த உரோமச முனிவர் நான்முகனுடைய திருவடிகளை வணங்கி நின்ருர்.

நான்முகன் உரோமச முனிவரைப் பார்த்து ''இம்முனிவர்கள் நிறையறிவைப் பெருமல் குறையறிவைப் பெற்று வாதாடுகிருர்கள். இவர்களுக்கு உறுதிமொழி உரைத்து அறிவினைத் தெளியச் செய்வாயாக'' என்று கட்டளையிட்டான். உரோமச முனிவர் சொற்போரிட்ட முனிவர்களைப் பார்த்துச் ''சிவபெருமானுடைய திருவடிகளை யல்லாமல் வேறே கதியில்லை'' என்று கூறினர். இதனைக் கேட்டுச் சொற்போரிட்ட முனிவர்கள் மிகுந்த நாணத்தை யடைந்தார்கள்.

வேதனுரை கேட்டார்க்கும் வித்தையகங் காரத்தால்
போதம் மறந்துபெரும் போராட்டம் உற்றதென்ருல்
சீத மலிகடற்பார்ச் சிற்றறிஞர் தேறுவரோ
நாதனருளின்றி ஞான நிலை தோற்ருதே. —தலபுராணம்

பிறகு உரோமச முனிவர் நான்முகனைப் பார்த்து ''எனக்குயாது பணி?'' என்று வினவினர். நான்முகன் ''நிலவுலகத்தில் உள்ள திருவாமாத்தூர்க்குச் சென்று இறைவனை பழிபட்டுச் சிறப்பினை யடைவாயாக'' என்று கூறினன்.

உடனே உரோமச முனிவர் புறப்பட்டுத் திருவாமாத்தூரை யடைந்து அங்கெழுந்தருளிய சிவபெருமானுக்குப் பூசை முதலி யன இயற்றி வழிபாடு செய்து அங்கு பலநாள் தவஞ்செய்து கொண்டிருந்தார். இறைவன் வழக்கம்போல் மழவிடைமேல் இவர்ந்து உரோமச முனிவருக்குக் காட்சி நல்கினர். 'உனக்கு வேண்டியது யாதென்று கேட்டார். முனிவர் "எனக்கு வீடு பேற்றை அருள்வாயாக" என்று இறைவனைப் பார்த்துக் கேட்டார்.

இறைவன் உரோமசரைப் பார்த்து, "உனக்கு வீடுபேற் றைப் பிறகு தருவோம். நீ இப்பொழுது கயிலைமலையை அடைந்து நந்தி முதலியவர்களோடு வாழ்ந்திரு! அதனல் உனக்கு எல்லாவகையான நன்மைகளும் உண்டாகும்" என்று திருவாய்மலர்ந் தருளினர். உரோமச முனிவரும் அவ்வாறே கயிலையை அடைந்து தங்கியிருந்தார்.

15. பிருங்கிமுனிவர் வழிபட்டது

பிருங்கி என்பவர் முனிவர்களில் ஒருவர். இவருடைய பிறப்புவளர்ப்பைப் பற்றிய விபரந் தெரியவில்லை. இவர் இறைவ னிடத்தில் மட்டும் பேரன்புகொண்டு போற்றினர். இறைவியி னிடத்திலோ அளவுகடந்த பகை கொண்டார். இறைவியினுல் தான் உயிர்கள் பிறந்து இறந்து உழன்று தடுமாறுகின்றன என்பது இவருடைய முடிபு. அதனல் இறைவியை இகழ்ந்து கொண்டே யிருந்தார்.

இறைவி, பிருங்கி முனிவருக்கு அறிவுரை புகட்டவேண்டும் என்று எண்ணினள். இறைவனைப் பார்த்து நாம் இருவரும் ஒரே உருவமாதல் வேண்டும். அவ்வாருய்விடின் பிருங்கி முனிவன் தங்களைமட்டும் எவ்வாறு வணங்குகிருன் என்பதைப் பார்க்கிறேன் என்ருள். இறைவன் இறைவியின் வேண்டுகோ ளுக்கு இணங்கினர். இருவரும் ஓர் உருவ (அர்த்தநாரீசுரவடிவ) மாயினர்.

இறைவனைப் போற்றவந்த பிருங்கி முனிவர் இறைவன் இருந்தகோலத்தைக் கண்டார். இறைவியை வலஞ்செய்யக்

கூடாது என்று முடிவு கட்டினுர். வண்டின் வடிவத்தை எடுத் கொண்டு இருவருக்கும் நடுவே துளைத்துக்கொண்டு போய் இறைவனைமட்டும் வலஞ்செய்தார். பிருங்கியின் செயல், இறை விக்கு மிகுத்த சினத்தை உண்டாக்கியது: முனிவரைப் பார்த்து என்னை வெறுப்பாயானுல் உடலில் என்னுடைய கூருன ஊன் முதலியவைகளையும் உதிர்த்து விடுவாயாக என்று கட்டளை யிட் டார். முனிவர் அவ்வாறே இறைவியின் கூருன ஊன் உதிரம் முதலியவைகளை உதிர்த்தார். அவரால் நிற்கவும் முடியவில்லை. தள்ளாடிக் கீழே விழப்போனுர். இறைவன் முனிவருக்கு மற்று மோர் காலை வழங்கினுர். கையொன்றில் ஊன்றிக் கொள்ளுமாறு தடியொன்றும் ஈந்தார். முனிவர் முக்காலும் கோலும் உடையராய் விளங்கினுர்.

கொங்கணர் என்பவர் சித்தர்களில் ஒருவர். இறைவியின் அருளைப்பெற்று அதனுற் சிறப்புற்றவர். பிருங்கி முனிவரும் கொங்கணரும் ஒருநாள் ஒருவரை யொருவர் கண்டனர். இரு வருக்கும் இறைவன் உயர்ந்தவரா? இறைவி உயர்ந்தவளா? என்பது பற்றிக் கடுமையான வாதம் மூண்டது. பிருங்கி முனிவர் சிவபெருமானை பரம் என்ருர். கொங்கணரோ இறைவியே பரம் என்ருர். இருவருக்கும் சொற்போர் பலநாள் நிகழ்ந்தது.

சிலர் இறைவனையும் இறைவியையுங் கண்டு, இவர்க ளுடைய சொற்போரை ஒழித்து உண்மையை விளக்கவேண்டு மென்றனர். இறைவன் இதனை அகத்தியர் விளக்குவார் என் ருர். எல்லோரும் பொதியமலைக்குச் சென்று அகத்திய முனிவ ரைக் கண்டார்கள். அகத்தியர் முனிவர்களையெல்லாம் பார்த்து, இறைவனும் இறைவியும் வெவ்வேறென்று மாறுபாடு கொள்ளு கிறவர்கள் வீடுபேறடைதல் அரிது. இறைவனும் இறைவியும் ஒன்றே என்பதை எளிதாக வுணர்ந்தவர்கள் தாம் எளிதாக வீடு பேற்றை அடைவார்கள்'' என்று கூறினுர். எல்லோரும் தத்தம் இருப்பிடத்திற்குப் போய்ச் சேர்ந்தார்கள். பிறகு அகத்தியர் கொங்கணரைப் பார்த்து ''உன்னுடைய விருப்பம் யாது?'' என்று வினவினுர். கொங்கணர் ''இறைவனும் தாங்களும் கயிலை, பொதியை என்னும் இரண்டுமலைகளின் மீதும் இருக்கும் அளவும் உடலொடு வாழ்ந்து அருட் சித்தாடலை விரும்புகின்

றேன் "என்ருர்." அல்வாறே யாகும் செல்வாயாக" என்று அவருக்கு நீறளித்து அனுப்பினுர். பிறகு பிருங்கி முனிவரைப் பார்த்து "உன்னுடைய விருப்பம் யாது?" என்று வினுவினுர்.

"வீடு பேறடைதலே என்னுடைய விருப்பம்" என்ருர். பிங்கி முனிவர். அகத்தியர் பிருங்கி முனிவரைப் பார்த்து, "இறைவியின் மனங்களிகூரும் வரையிலும் வீடு பேற்றை அடைதல் உனக்கு அருமை" என்று கூறினுர்.

பிருங்கி முனிவர் அகத்தியரைப் பார்த்து, நான் நீண்டகலாமாக இறைவியைப் பகைத்து இகழ்ந்த தீவினையை எவ்வாறு போக்குவது? அதற்கோர் வழி சொல்லியருள வேண்டுமென்று வேண்டிக்கொண்டார்.

அகத்தியர் பிருங்கி முனிவரைப் பார்த்து, பம்பையாறு என்னும் ஆற்றின் கரையில் மிகுந்த புகழையுடைய திருவாமாத்தூர் என்னுஞ் சிவப்பதி ஒன்றுள்ளது. நீ அங்குசென்று இறைவனையும் இறைவியையும் போற்றிப் பணிந்து தீவினையைப் போக்குவாயாக!" என்று கூறினுர்.

முனிவர், தம்முடைய மனித உடலை விட்டுத் திருவாமாத்தூருக்குச் சென்று வன்னிமரமாகி இன்றளவுந் தவஞ்செய்து கொண்டிருக்கின்ருர். இவர் எக்காலத்தில் வீடுபேற்றை அடைவாரென்பது தெரியவில்லை. முனிவர் வடிவுக்கொப்ப, வன்னிமரமும் மூன்று பிரிவான அடிப்பாகமும், உள்ளீடற்ற நிலையுமாய்ச் செழிப்பாயுள்ளது.

16. மதங்கமுனி முதலோர் வழிபட்டது

மதங்க முனிவர் என்பவர் முனிவர்களில் ஒருவர். இவருடைய பிறப்பு வளர்ப்புப்பற்றிய செய்திகள் ஒன்றுந் தெரியவில்லை. தமக்கு உரிமை மிக்க சிவப்பதி வன்னிவனமாகிய திருவாமாத்தூரே என்று முடிவு செய்தவராய் அப்பதியில் உறைந்திருந்தார். நான்மறைகளினும் விதிக்கப்பட்ட அறுவிதமதங்களையும் இவர் தம்முடைய உடலாக அஃதாவது அங்கமாக இவர் கொண்டமையின் மதங்கர் என்று பெயர் பெற்ருர். (மத+அங்கர்=மதங்கர்) மற்றும் இவரைப் பல முனிவர்கள், மதுவை

(தேனை) எப்பொழுதுந் தடையில்லாமல் அளிக்கும் மலரை வண்டினஞ் சூழ்ந்து திரிதலைப்போல் திரிந்தமையால் இவருக்கு மதங்கர் என்று பெயர் வந்தது என்று சொல்லினும் பொருந்தும். (மது+அங்கர்=மதங்கர்—தேனை உடலிலே உடையவர். அஃதாவது ஈண்டு ஞானமாகிய தேன் என்க).

இம்மதங்க முனிவர் இத்திருவாமாத்தூரில் எழுந்தருளிய சிவபெருமானைச் செந்தாமரை மலர் முதலிய மலர்களால் நாள்தோறும் வழிபட்டு அப்பெருமானுடைய திருவருட்கடலிலே மூழ்கி எல்லாவற்றையும் உணர்ந்த சிறப்போடு திகழ்ந்திருந்தார். இம்முனிவருடைய அருளைப் பெற்று மகிழ்ந்திருக்கவேண்டும் என்னுங் குறிப்போடு ஏழு முனிவர்கள் இவரை வந்தடைந்தார்கள். வந்தவர்களுடைய பக்குவ நிலையை இம்மதங்கமுனிவர் உணர்ந்து அவர்களைத் தம்புதல்வரினும் மிக்காராய்ப் பாராட்டி தம்முடன் வைத்துத் தவமியற்றி யிருந்தார்.

அந்நாளில், சபரன் என்னும் பெயருடைய அரசன் ஒருவன் இருந்தான். அவன் நான்மறைகளும் நவிலும் கடவுளர் பலரும் சுத்தபரம் என்றுணர்ந்த தூய குணம் அமையப் பெற்றவன். அம்மன்னனுக்குப் பெண் ஒருத்தி பிறந்தாள். அவளுக்கு வயது பன்னிரண்டு வரையிலும் ஆகியது. அவளுக்கு அடுத்தபடியாக அரசனுக்கு மக்கட்பேறு உண்டாகவில்லை. அரசனே ஆட்சியை மேற்கொள்வதற்கு ஆண்மகப் பேறில்லையே என்று அவலங் கொண்ட மனத்தினன் ஆனான்.

ஒருநாள் அரசனுடைய அவைக்கு அந்தணன் ஒருவன் வந்தான். அவன் அரசனிடத்திலே நன்கொடையை நாடி வந்திருந்தான். அரசன் அந்த அந்தணனைப் பார்த்து, "நான் அரசாட்சியின் பொருட்டு ஆண்மகவு ஒன்றை விரும்புகிறேன். அதனை அடைதற்கு வழியென்ன கூறுவாயாக" என்றான்.

அந்தணன் அரசனைப் பார்த்துத் "திருவாமாத்தூரிலே எழுந்தருளிய சிவபெருமானைப் பணிந்து போற்றிக் கங்கையாறும்விரும்பிப்போற்றும் பம்பையாற்றின்கரையிலே பலருக்கு இனிமையான உணவளித்தல் வேண்டும். மேலும் அங்கே ஏழு முனிவர்கள் வசிக்கின்றார்கள். அவர்களைப் போற்றி அவர்க

ளுடைய சொற்படி நடந்தால் உனக்கு ஆண்மகப் பேறுண்டாகும்'' என்று கூறி நன்கொடைகளை மிகுதியாகப் பெற்றுக் கொண்டு சென்ருன்.

அரசன், அந்தணன் கூறியபடி செய்ய எண்ணியவனுய்ப் பொன் முதலியவற்ருேடு ஆமாத்தூரையடைந்து, மிகுந்த அன்போடு அன்னதான முதலியவைகளைச் செய்து, முனிவர்களைக் கண்டு வணங்கிப் போற்றினுன். தான் ஆண் பிள்ளைப் பேற்றையடையவேண்டும் என்னும் எண்ணத்தை அவர்களுக்குத் தெரியப்படுத்தினுன். அம்முனிவர்கள் அரசனைப் பார்த்து ''உன்னுடைய மகளை எங்களுடைய பணிவிடைகளைச் செய்து கொண்டிருக்குமாறு விட்டுச் செல்வாயானுல் ஓராண்டுக்குள்ளே உன்னுடைய எண்ணம் கைகூடும்'' என்று உரைத்தார்கள்.

அரசனும் அரசியும் முனிவர்களுடைய விருப்பத்திற்கு இணங்கினர். அப்பொழுதே தங்களுடைய மகளை அவர்களுடைய பணிவிடையைச் செய்து கொண்டிருக்குமாறு ஏற்படுத்தினர். அப்பெண்ணும் முனிவர்களுடைய பணியை மனங்கோணுது செய்து கொண்டிருந்தாள். அரசனுக்கு ஆண் மகப்பேறும் முனிவர்கள் மொழிந்தபடி உண்டாயிற்று. முனிவர்களுடைய பணி செய்திருந்த பெண் சபரனுடைய மகளாதலின் சபரி என்னும் பெயரைப் பெற்ருள். அவளுடைய பணிவிடை எத்தகைய குற்றமும் அற்றதாகச் சிறந்து விளங்கியது.

ஒருநாள் சபரி, முனிவர்களுடைய பூசைக்கு நீர் எடுத்து வருவதற்காகக் குளத்திற்குச்சென்ருள். வழியில் ஆண் மான் ஒன்று பெண் மானுடன் உறவுகொண்டிருந்தது. அதனைக் கண்ட சபரிக்கு மனம் வேறுபட்டது. அதனுல் திகைத்துச் சிறிது நேரம் அந்த இடத்திலேயே நின்றுவிட்டாள். பிறகு மனந் தெளிந்து நீரை எடுத்துக்கொண்டு விரைவாகத் திரும்பினுள். முனிவர்கள் தம் வழிபாட்டிற்கு நீர்வரத் தாழ்த்தலைக் கண்டதுந் தம்முடைய தண்டத்தின் ஆற்றலால் தண்ணீரை உண்டாக்கிப் பூசையைச்செய்து முடித்தனர்.

தான் கொண்டு வந்த நீர் பயன்படாமையைக் கண்ட சபரி மிகவும் அச்சங்கொண்டவளாய் நடுநடுங்கி நின்ருள். முனிவர்கள், சபரி காலந்தாழ்த்து வந்த காரணத்தைத் தம்முடைய

அறிவுப் பார்வையால் உணர்ந்து கொண்டனர். அவளுடைய முகம் மான் முகமாகமாறும்படி சாபவுரை சாற்றினர். சபரியின் முகம் அவ்வாறே மான் முகம் ஆயிற்று. அந்தோ! நாம் இதுவரையில் இம்முனிவர்கட்குத் தொண்டு செய்துகொண்டிருந்ததன் பலன் இதுதானே? என்று மனம் வருந்தினள். தனக்கு நேரிட்டுள்ள சாபக்கேட்டை மாற்றியருள வேண்டுமென்று பணிந்து வேண்டிக்கொண்டாள்.

முனிவர்கள் சபரியைப் பார்த்து, "உன்னால் எங்களுக்குச் செய்யக்கூடிய பணிவிடையின் அளவு இவ்வளவேயாகும். நாங்கள் இனிமேல் இவ்வுடலோடு இவ்வுலகில் வாழமாட்டோம். முன்னாளிலே பசுவினால் வழிபாடு செய்யப்பெற்ற இச்சிவபெருமான், உன்னுடைய வழிபாட்டையும் விரும்புகின்றார். நீ வழிபட்டுக்கொண்டு இவ்விடமே இருப்பாயாக. திருமால் சிறிது காலத்திற்குப் பின் சூரிய குல அரசனாகி இராமனென்ற பெயரோடு இவ்வுலகில் தோன்றி இவ்விடத்திற்கு வருவான். நீ அவனுடைய உருவத்தைக் கண்டவுடன் உன் முகமாறிவிடும். உடனே நல்ல கதியை அடைவாய்" என்று கூறிவிட்டு அவ்வேழு பேரும் இலிங்கத்துக்குள் மறைந்துவிட்டார்கள். சபரி அம்முனிவர்களுடைய கட்டளைப்படியே ஆமாத்தூர் இறைவனை வழிபட்டுக்கொண்டு அவ்விடமே தங்கியிருந்தாள்.

17. நான்முகன் வழிபட்டது

திருமால் தன்னுடைய தந்தையென்பதையும் பிரமதேவன் மறந்து, ஒரு காலத்திலே அம்மாலுடன் கடும்பகை கொண்டான். மண்ணும் விண்ணும் நடுநடுங்க அப்பண்ணவனுடன் பெரும் போர் செய்தான். அத்தவறுனது நான்முகன் தலைமீது அமைந்திருந்தபடியினால், அந்த நான்முகனைச் சூழ்ந்திருந்த முனிவர்களும் அவனை வெறுத்துச் செல்லத் துணிந்தார்கள். கலைமகளும் நான்முகனை ஒரு பொருளாகக் கருதவில்லை. இத்தொல்லையில் இருந்து தப்புதற்கு வழியாது என்று நான்முகன் எண்ணமிட்டான். வைகுந்தத்தை அடைந்து திருமாலைக் கண்டு தொழுது ஏத்தினன்.

திருமால் நான்முகனைப் பார்த்து, "உன்னுடைய உள்ளத்தின் குறிப்பை நான் உணர்ந்தேன். முன்னாளிலே ஒரு பிரமன்

இவ்வாறே பிழை செய்து மிக்க இழிவையடைந்தான். பிறகு சிவபெருமானைப் போற்றி வழிபட்டு நன்மையுற்றான். நீயும் அவ்வாறே செய்வாயாக!'' என்று கூறியருளினர்.

நான்முகன் இறைவனை வழிபடுதற்கு ஏற்ற சிவப்பதி யாது என்று ஆராய்ந்தான். சிவப்பதிகளுள் எதுவும் திருவாமாத்தூருக்கு இணையாகாது என்று உள்ளத்தில் தேறினன். தன்னுடைய எண்ணத்தைத் திருமாலிடமுங் கூறி, அவருடைய உடன்பாட்டையும் பெற்றுக்கொண்டு, திருவாமாத்தூரை யடைந்தான். குளிர்ந்த மலர்களைக்கொண்டு ஒரு சதுர்யுகம் வரை வழிபாடு செய்தான். நான்முகன் இவ்வாறு சிவபெருமானை வழிபட்டுக்கொண்டிருக்கும்போது இறைவன் தம்முடைய வலக்கை உடுக்கைச் சிற்றொலியினல் படைப்புத் தொழிலைச் செய்து உலகம் அழியாமற் காத்தருளினர்.

பிறகு ஆமாத்தூர் அண்ணல் உமையவளோடும் வேற்படையை ஏந்திய முருகக்கடவுளோடும் வெள்ளிய இடபத்தின் மேல் வந்து காட்சி யளித்தருளினர். நான்முகன் இறைவனை உருத்திர மந்திரத்தாற் போற்றிப் புகழ்ந்தான். தாளிலே வீழ்ந்து பணிந்தான். "நன்மை கெட்டு வருந்துகின்ற என்னைப் பழைய படி நன்னிலையில் நிலை நிறுத்தவேண்டும்'' என்று வேண்டிக் கொண்டான்.

இறைவன் நான்முகனைப் பார்த்து, "எம்மை இகழ்வதைப் பார்க்கினும் எமதிடப்பாகத்தில் எழுந்தருளிய உமையவளை இகழ்தல் மிகு கொடுமையாம். அந்த உமையவளை இகழ்தலினும், எம்மைப் பூசித்துச் சக்கரப் படையைப் பெற்று, எக்காலத்திலும் மூன்று உலகங்களையும் காக்கும் திருமாலை இகழ்தல் மேலும் பெருங்கொடுமையாகும். உனக்குத் தாயுந்தந்தையுமாய் நிற்கும் அம்மாயவனைப் பணிந்து போற்றுவாயானல் உனக்கு எல்லா வகையான நன்மையும் உண்டாகும். இதைப் பற்றி நீ எள்ளளவும் ஐயப்படவேண்டாம். உன்னுடைய உலகத்திற்குச் செல்லுவாயாக! என்று கட்டளையிட்டருளினர்.

இவ்வாறு ஆமாத்தூர் இறைவன் அருள்புரிந்து மறைந்தருளினர். அவ்வளவில், கலைமகளும் நான் முகனை எந்நாளுஞ் சூழ்ந்திருக்கும் முனிவர்களும் நான்முகனைத் தேடி வந்து பணிந்து போற்றினர்கள். "நாங்கள் செய்த பிழையைப் பொறுத்

தருளவேண்டும்'' என்று வேண்டிக்கொண்டார்கள். இந் நிகழ்ச்சியைக் கண்ட நான்முகன் மிகுந்த வியப்படைந்து தன்னுடைய உலகத்திற்குச் சென்றான்.

நான்முகன் முனிவர்களைப் பார்த்து ''எனது தொழிலை இதுவரை யார் செய்தது?'' என்று வினவினான். அவர்கள் ''எங்களுக்குத் தெரியாது'' என்று மறுமொழி கூறினார்கள். இதனைக் கேட்ட நான்முகன் இது திருவாமாத்தூரில் எழுந்தருளிய சிவபெருமானுடைய திருவிளையாடல் என்று உணர்ந்து மிகுந்த நாணத்தை யடைந்தான்.

18. பன்னிரண்டு கதிரவர்கள் வழிபட்டது

நாள்தோறும் பகற்பொழுதைச் செய்து திங்கள் முதலாகிய பிறகோள்களுக்கு ஒளியைத் தருகின்ற சூரியனும், அவனைப் போன்ற மற்றைய கதிரவர்களும், வேறு வேறாகிய வடிவமும் பெயரும் உடையவர்களென்று நூலோர் நுவல்கின்றனர்.

தாமரையை மலரச் செய்கின்ற தன்மையும், அறுவகைச் சமயத்தோரும் கண்டபோது வணங்கப் பெறுகின்ற பெருமையும் ஆயிரங்கதிர்களைக் கொள்ளுஞ் சிறப்பும், வானகத்திடத்தே ஒரு சக்கரத்தையுடைய தேரினை ஏழு குதிரைகள் இழுக்கத் தாம் அதன்மேலே செல்லுஞ் சீரும் பன்னிரண்டு கதிரவர்கட்கும் பொதுவானதாம்.

கதிரவன் ஒருவன் என்றாலும், அல்லது பன்னிரண்டு பேர்கள் என்று கூறினாலும், அல்லது கோடியென்றாலும், அல்லது பலகோடி என்று பகர்ந்தாலும், அவர்களெல்லோரும் ஆமாத்தூரில் எழுந்தருளிய இறைவனுடைய வலக்கண்ணின் கூறேயாவர்.

ஏழு நாக்களையுடைய தீக்கடவுள், கதிரவர்களிடத்திலே வாழ்வான். அதற்குச் சான்று கதிரவன் வெம்மையில் சூடிருப்பதேயாம். திங்கள் பகலவனிடத்தில் இருப்பதற்குத் திங்கள் தோற்றம் இல்லாதபோது பேரிருளாயிருப்பதே போதிய சான்றாம். நான்முகனும், திருமாலும், சிவபிரானும் ஆகிய மூவரும் முறையே காலை, நண்பகல் மாலை, இக்காலங்களில் பகலவன்

ஒளியிடைபற்றப் படுவதால் பரம்பொருளின் தன்மை வாய்ந்த கதிரவனை வழிபடாத இயல்பு ; ஏழிசையினுல் ஒலிக்கும் மறைகளின் தொடர்புடைய அந்தணர்கட்கு இல்லையாம்.

அவன் அவள் அதுவென்னும் பாகுபாட்டால் அமைந்ததும், ஒன்றுக்கொன்று மாறுபட்டதும் ஆகிய பல சமயங்களில் உள்ளார்க்கும், பரம்பொருள் ஒன்று உண்டென்னுங் கொள்கையினையுடையோர்க்கும், அவர்களின் கொள்கைகளையும் அவ்வவ்வாறே தழுவி மேற்கொள்ளும் சமரச நோக்குடையோர்க்கும், கெடுதல் இல்லாத காரியங்களின் சான்ருக உள்ளவன் பகலவனே யாவான்.

பழைய நூல்கள் பகருகின்ற கதிரவர்கள் பன்னிருவரும் குற்றங்கள் எவையோ தம்மிடம் இருப்பதாக எண்ணினுர்கள். அதனைப் போக்கிக்கொள்ள முடிவு செய்தார்கள். குளிர்ந்த நீர்ப்பெருக்கினையுடைய பம்பையாறு விளங்கும் திருவாமாத்தூரை யடைந்து சிவபெருமானை வழிபட்டுப் போற்றுங் கருத்துடையவர்களானுர்கள். பகற்போதின் உயிராகத் தோன்றுகின்ற கதிரவர்கள் பன்னிருவரும் நாள்தோறும் உலகத்துள்ள உயிர்களுய்யுமாறு, பகல் செய்தற்கு விண்வழி இயங்கும் ஒரு கதிரவனை அங்கு நிறுத்திவிட்டு மற்றைய பதினெருவரும் அந்தணர் வடிவுகொண்டு இவ்வுலகில் வந்தார்கள். பம்பையாற்றில் நீராடினுர்கள். அன்பகத்தில்லாது நோக்குவார்க்குக் கல்வடிவாகத் தோன்றும் இலிங்கமான அழகிய நாதரை, நான்முகன் நவின்ற நான்மறை விதிப்படியும், ஆகமத்தின் அருமுறைப்படியும் அன்புடன் பூசித்து வழிபட்டார்கள்.

பதினெரு கதிரவர்களும் அவ்வாறு பன்னெடுங்காலம வழிபட்டார்கள். ஆமாத்தூரில் எழுந்தருளிய அருட்பெருஞ்சோதியாகிய இறைவன் தம்முடைய உண்மை வடிவத்தோடு விண்வழியே செல்லுங் கதிரவன் முன் தோன்றி, " நீ எவ்வாறு வரங் கேட்டாலும் அவ்வாறே வழங்குகின்ருேம் " என்று திருவாய் மலர்ந்தருளினுர்.

கதிரவன் கண்ணுதலைப் பணிந்து போற்றினுன். " நான் அங்கு உன்னுடைய வடிவத்தை வழிபாடு செய்யும்போது தோற்

ருமல், குதிரைகள் ஏழு இழுக்குமாறு விண்பாற் செல்லும்போது தோன்றியருளக் காரணம் யாது ? என்று உசாவினன். அதற்கு இறைவன் "எல்லோருக்கும் பயன்படும் காலம் இதுவேயாம்" என்று கூறியருளினர்,

கதிரவன் கண்ணுதற் பெருமானைப் பார்த்து, எனக்கும் என் போன்ற ஏனைய பதினொருவருக்கும். முன்னாளில் தக்கனுடைய வேள்விக்களத்திடை நின் கூருக வந்த வீரபத்திரனல் உதிர்க்கப் பட்ட பற்கள் முளைக்கவேண்டும் என்று வேண்டிக்கொண்டான். "அவ்வாறே ஆகுக" என்று சிவபெருமான் அருள் செய்தார். அப்பொழுது மற்றைப் பதினொருவரும் அவ்விடத்தை யடைந்து இறைவனை முறைப்படி வணங்கினர்கள். இறைவனைப் பார்த்து "எம்மை வணங்குவார்களுடைய நோயைப் போக்கி யருள வேண்டும். சமயவாதத்தவர்கள் எங்களை இகழாதிருத்தல் வேண்டும். காய்ந்த விதைகள் கருகிப் போகாமல் முளைத்தல் வேண்டும். எம்முடைய கதிரொளிமுன் எல்லாக் கோள்களும் ஒளி மழுங்கி மறைதல் வேண்டும். எவ்வகைத் தேவர்களும் எம் முள்ளே இருத்தல் வேண்டும்" என்றிப்படிப் பல வரங்களைக் கேட்டார்கள். இறைவனும் அவ்வாறே அளித்து மறைந்தான். பிறகு பன்னிரு கதிரவர்களும் தத்தம் இருப்பிடத்தை யடைந் தார்கள்.

19. அட்டவசுக்கள் வழிபட்டது

அட்ட வசுக்கள் என்பவர்கள் விண்ணவர் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் கோடிக்கொரு தலைவராக எண்மர் அமைந்திருந்தனர். இவர்கள் ஒரு காலத்தில் வசிட்டர் இல் லத்திற்கு வந்தார்கள். வசிட்டர் காமதேனு (விரும்பியதைத் தரும் தெய்வப் பசு)வைக் கொண்டு வசுக்கள் எண்மருக்கும் அரிய விருந்து செய்தார். விருந்திற் படைக்கப்பட்ட உணவு கள் சுவைமிக்குடையனவாக விளங்கின. வசுக்களுள் இளைய வன் இத்தகைய உணவினை நாம் இதுவரையில் உண்டதில் லையே. இதிற் சிறிது கொண்டுபோய் நம்முடைய மனைவிக்குக் கொடுப்போம் என்று எண்ணியவனய் எடுத்துவைத்தான். பிறகு கொண்டு போய்த் தன்னுடைய மனைவியிடங் கொடுத்

தான். அவள் அதனை உண்டு மகிழ்ந்தாள். அதன் சுவை அவளை மயக்கியது. அவள் அவ்வுணவு தன் கணவனுக்கு எவ்வாறு கிடைத்தது என்று கேட்டறிந்தாள். "எவ்வாருயினும் நீ முயற்சி செய்து இத்தகைய அரிய உணவினையளிக்குங் காமதேனுவை இங்கு கொண்டு வந்துவிட வேண்டும் என்று கட்டளையிட்டாள்.

இந்த வசு என்பவன் மனைவியின் மொழியை மறுக்க முடியாமல், வசிட்டர் மனையில் களவு செய்து கொண்டுபோய் விடுவதென்று தன் துணைவர்களைக் கலந்து ஆராய்ந்து முடிவு செய்தான். தன் துணைவர்களையும் அழைத்துக்கொண்டு வசிட்டர் மனைக்குப் போய்க் காமதேனுவைக் களவாக வலிந்து பிடித்தான். காமதேனு தன்னைக் கவர முயன்றவர்களைத் தன்னுடைய கொம்பின் உதவியால் விலக்கி வசிட்டரிடம் ஓடியது. அவரைக் கண்டு பணிந்து நிகழ்ந்ததைக் கூறியது.

செய்தியை உணர்ந்த வசிட்டர் சினங்கொண்டார். வசுக்கள் எண்மரும் மனிதப் பிறப்பை யடையுமாறு சாபங் கொடுத்தார். பசுவைக் கவருவதில் முதன்மையாகத் தொடர்பு கொண்டவனுகிய இளையவன் மட்டும் மனித யாக்கையில் நீண்டகாலம் இருக்குமாறும், துணைபோய துணைவர்கள் பிறப்பெடுத்தவுடன் உடலொழித்து மீளுமாறுங் கட்டளையிட்டார். மனித யாக்கையை அடைந்த வசுக்களில் எழுவரும், தாயினுல் கங்கையிற் போடப்பட்டு அவ்வுடல் ஒழிந்து உடனே விண்ணுலகத்திற்கு மீண்டார்கள். இளையவன் மட்டும் வீட்டுமன் என்னும் பெயரையடைந்து மணமில்லாதவனுய் மண் மேல் நெடுங்காலமிருந்து பாரதப் போரின் இறுதியில் மாண்டான்.

வசுக்கள் தாங்கள் களவுச் செயலில் ஈடுபட்டதால் நேர்ந்த தீவினை நீங்கி, நற்கதியை அடைதற்காம் வழியைக் காட்டியருள வேண்டுமென்று வசிட்டரை வேண்டிக்கொண்டார்கள். வசுக்களைப் பார்த்து வசிட்டர், "நீங்கள் திருவாமாத்தூரையடைந்து இறைவனை வழிபடுவீர்களாயின் அக் குற்றம் அகலும்; மேலான நற்கதியையும் அடையலாம் என்று அருளினுர். வசுக்கள் அவ்வாறே திருவாமாத்தூரையடைந்து இறைவனைப் போற்றி வழிபட்டார்கள். இறைவர் வசுக்களுக்குமுன் தோன்

றிக் காட்சியளித்தருளினர். "நீங்கள் இவ்விடம் வந்து எம்மை வழிபட்டதற்குக் காரணம் யாது?" என்று கேட்டார். வசுக்கள் "நாங்கள் எங்களுடைய பழைய பதவியை அடையவேண்டும்", என்று வேண்டிக்கொண்டார்கள். இறைவன் காட்சி கிடைத்தும் இவர்கள் வீடுபேற்றினை நாடாமல் துன்பத்திற் கிடமான கீழான பதவிகளையே வேண்டிக் கேட்டது இவர்களுடைய வினைப்பயனே யாகும். இறைவன் "அவ்வாறே வழங்கினேம்" என்று அருள் புரிந்தார். தேவர்கள் வசுக்களை அழைத்துக்கொண்டு சென்றூர்கள்.

20. மகாகாளன் வழிபட்டது

மகாகாளன் என்பவன் மாகாளியின் மைந்தன். இவனுடைய பெயர் மாகாளன் எனவும் வழங்கும். இம்மாகாளன் பூத இனத்தைச் சேர்ந்த தலைவனுவான். இவன் ஐயனருடைய படை வீரர்களில் ஒருவன். இவன் இறைவனுடைய அடியார்களைக் கண்டால் மிகவும் அஞ்சுவான். இம்மாகாளனைத் தீயவர்கள் தீமையான கொலை, புலை, மது முதலியகொண்டு வழிபடுவார்கள். இந்த மாகாளன் இழிந்தவர்களுடைய தீச்செயல்களை விலக்காமல் ஏற்றுக்கொண்டிருந்தபடியால் இவனும் இழிந்தவனே யானன்.

ஐயனர் அந்த மாகாளனைப் பார்த்து, "நீ இழிந்தவர்களுடைய இழிவான பூசையைப் பெற்று மிகவும் இழிந்தவனுக விளங்குகின்ருய், என் கண்முன் நில்லாதே" என்று கட்டளையிட்டார். இதனைக் கேட்ட மாகாளன் நெஞ்சங் கலங்கினன். ஐயனருடைய அடிகளில் வீழ்ந்து வணங்கினன். பலவாறு போற்றிப் பரவினன். "ஐயனே! என்னை வெறுக்க வேண்டாம். நான் உய்யும் வகையை உணர்த்தியருள வேண்டும்" என்று சொல்லி வேண்டிக்கொண்டான்.

ஐயனர் மாகாளனைப் பார்த்து, திருவாமாத்தூர் என்னும் ஊர் ஒன்றுள்ளது. அவ்வூரில் பசுக்கள் முதலாயின வழிபட்டுச் சிறந்த பயனையடைந்திருக்கின்றன. நீயும் அவ்வூரையடைந்து இறைவனை வழிபட்டுத் தீவினையொழித்து நல்வினையுடையவனுய் மீள்வாயாக" என்று அருள் செய்தார். மகா

காளன் ஆமாத்தூரை அடைந்தான். பம்பையாறு ஆம்பலம் பூம்பொய்கை ஆகியவைகளில் மூழ்கினன். இறைவனை உள்ளத்திலே எண்ணிக்கொண்டு அபிராமேசர் எழுந்தருளிய திருக்கோயிலை நோக்கிச் சென்ருன். அங்கு வசித்திருந்த முனிவர்கள் சிலர் இவனைக் கண்டதும் மிகுந்த சினங்கொண்டவர்களாய், "கொடிய தீவினையை உடையவனே! நீ இங்கு ஏன் வந்தாய்?" என்று சொல்லி அதட்டினர்கள்.

மாகாளன் அம்முனிவர்களைப் பணிந்து, "நீங்கள் கூறியது உண்மை. நான் மிகுந்த தீவினையுடையவன்தான். நான் ஈண்டெழுந்தருளிய இறைவனைப் போற்றி அப்பெருமானுடைய திருவருளால் தீமையைப் போக்க வேண்டும் என்னும் நோக்கத்தோடு ஐயனுர் கட்டளைப்படி இங்கு வந்துள்ளேன்" என்று கூறினன். இவனுடைய உரையைக் கேட்டவர்கள் மறுத்தொன்றுங் கூறவில்லை. இறைவன் முன்படைந்து நெடுங்காலங் கடுந்தவம் புரிந்தான்.

இறைவன் மாகாளன் முன்பு தோன்றித் திருவருள் புரிந்தார். இவனுடைய தீவினைகள் நீங்கின. இறைவன் கட்டளைப்படி தீவினை புரிவோர்களை இவன் ஒறுத்து வருத்தி நல்வழிப்படுத்தினன். ஐயனுருடைய படை வீரர்களில் ஒருவனுய் என்றும் மிகுந்த சிறப்புடன் விளங்கிக்கொண்டிருக்கின்ருன்.

21. இராமபிரான் வழிபட்டது

இராமபிரான் இலட்சுமணனேடும் சீதாபிராட்டியாரோடும் காட்டிற்கு வந்தார். இராவணன் சீதையைக் கவர்ந்துகொண்டு போய் இலங்கையிற் சிறைவைத்தான். அதன் பிறகு இராமரும் இலட்சுமணரும் சீதாபிராட்டியைத் தேடிக்கொண்டு தென்றிசை நோக்கி நடந்தார்கள். இராமபிரான் சீதாபிராட்டியைப் பிரிந்த துன்பத்தால் பலவாறு வருந்தினர். ஒருநாள் விண்ணிலே உடுக்களாய்த் திகழும் எழு முனிவர்கள்பால் முறையிட்டுக்கொண்டார். அகத்திய முனிவர் இராமபிரானுக்கு முன் தோன்றினர். இராமபிரான் அகத்திய முனிவரை வணங்கி என்னுடைய துன்பந் தீர்தற்கு ஒரு வழியைக் கூறவேண்டுமென்று வேண்டிக்கொண்டார்.

அகத்திய முனிவர் இராமபிரானுக்கு மெய்யறிவையுரைக்கத் தொடங்கினுர். இராமபிரான் " இம்மெய்யறிவுரைகள் இப்பொழுது எனக்குப் பயன்பட மாட்டா. நான் சீதையை அடைதற்காம் வழியை நீ நவிலவேண்டும் " என்று சொல்லி வேண்டிக்கொண்டார்.

அகத்தியர் இராமபிரானைப் பார்த்து, " அவ்விராவணன் எளிமையானவனல்லன். சிறந்து விளங்கும் தமிழ் நாட்டிலே பம்பையாற்றின் கரையிலே திருவாமாத்தூர் என்னுஞ் சிவப்பதி ஒன்றுள்ளது. நீ அப்பதியை அடைந்து ஆங்கெழுந்தருளியுள்ள சிவபெருமானைப் போற்றி இராவணனை வெல்வதற்கான வரத்தைப் பெறு. அவ்வாறு செய்வாயானுல் இராவணனை வெல்லுதல் எளிதாகும் " என்று உரைத்தார். அங்கு சிவபிரான் எழுந்தருளியுள்ள செய்தியை இராமபிரானுக்குக் கூறவில்லை. இராமபிரான் இலட்சுமணனேடு திருவாமாத்தூரையடைந்தார். அங்குள்ள ஆம்பலம் பூம்பொய்கை குளக்கரையில் ஆலமரஞ் செழித்து வளர்ந்து நீண்டு நின்றது. இருவரும் அந்த மரத்தடியிற் சென்று தங்கினுர்கள். இராமபிரான் இலட்சுமணனுடைய மடியில் தலையை வைத்துக்கொண்டு சிறிது கண்ணயர்ந்தார்.

அந்த ஆலமரத்தின்மீது அனுமார் தங்கியிருந்தார். அவர் இராம லட்சுமணரைக் கண்டு இவர்கள் யாரோ என்று ஐயங்கொண்டார். இவர்கள் நமக்குத் துணையானுலும் ஆவார்கள். இவர்களுடைய தன்மையை ஆராய்ந்து பார்ப்போம் என்று எண்ணினுர். இலைகள் சிலவற்றைப் பறித்து அவர்கள் மேலே எறிந்தரர். ஆலிலை மேலே விழுதலைக் கண்ட இலட்சுமணர் இராமபிரானுடைய உறக்கங் கலையுமோ என்று உள்ளங் குலைந்தார். மேலே நிமிர்ந்து அனுமாரைப் பார்த்தார். " அடா ! குரங்கே ஏன் வீணை வேலையைச் செய்கின்ருய் ! நீயார் ?" என்று அதட்டினுர். இலட்சுமணரின் உரையைக் கேட்ட அனுமார் " நான் என்னுடைய குலத்தொழிலைச் செய்கின்றேன். அது குற்றமன்று. இஃது என் குலத்தார்க்கு இயற்கையே. நீங்கள் உங்களுடைய பெருமையில் இருந்து சிறுமையடைந்த வகைபோர்ன்று காணப்பெறுகிறீர்கள். நீங்கள் மணியினு

லாகிய அரியணையில் இனிது வீற்றிருக்கத்தக்க பெருமையுடையவர்கள் என்பது உங்களுடைய தோற்றத்தினலேயே நன்கு விளங்குகின்றது. நீங்கள் தீவினையாளர்களைப்போல், கால் நடையாக அலைந்து இவ்வாறு மரத்தடியில் வந்து படுத்திருக்கக் காரணம் யாது? அதனை எனக்குக் கூறினல் மிகவும் நலமாக இருக்கும் '' என்று கூறினர்.

அவ்வளவில் இராமபிரான் விழித்துக்கொண்டார். அவர் இலட்சுமணனைப் பார்த்து, '' தம்பி! இவனைக் குரங்கென்று எண்ணி விடுதல் தக்கதன்று. இவனுடைய வாய்மொழிகளால் இவனுடைய புலமைத்தன்மை நன்கு விளங்குகிறது. நம்முடைய வில்லைக் கண்டும் இவன் அஞ்சாதவனய் இவ்வாறு உரையாடுவதனலே இவன் பெரிய வீரனக இருக்கவேண்டுமென்றுந் தெரிகிறது. இவன் தன்னுடைய காதில் குண்டலங்களை அணிந்திருப்பதனல், இவனுடைய தெய்வத்தன்மையும் விளங்குகின்றது '' என்று இயம்பும்போதே அனுமான் கீழே இறங்கி இருவரையும் வணங்கினர். முன் காட்டிய வடிவத்தை எட்டில் ஒன்ருகக் குறுக்கிக்கொண்டு நின்ருர். இராமபிரான் அனுமானுடைய வரலாற்றை வினவினர். அனுமான் சுக்கிரீவன் செய்தி வாலியின் செய்தி முதலியவைகளையெல்லாம் இரமாபிரானிடங் கூறினர். மேலும் இராமபிரானைப் பார்த்து, இதுவரையில் என்னுடைய காதுகளிலே இருந்த குண்டலத்தைக் கண்டவர்கள் மண்டலத்தில் எவருமிலர். அதனலேயே உன்னை, என்னையாண்டருள வரும் திருமாலே என்று உணர்ந்து கொண்டேன். நான் பெரிய வடிவத்தோடு சிறிய வடிவத்தையும் எடுக்கத்தக்க ஆற்றலுள்ளேன். நீங்கள் யாது கூறினும் அதனைச் செய்யக் காத்திருக்கிறேன் '' என்று கூறினர்.

இராமபிரான் அனுமானைப் பார்த்து, ''உன்னுடைய குறுகிய வடிவத்தை நாங்கள் பார்த்தோம். பெரிய வடிவத்தையும் பார்ப்பதற்கு விரும்புகிருேம் அதனைக் காட்டு வாயாக '' என்று சொன்னர். அனுமார் தன்னுடைய பேருருவத்தை இராமபிரானுக்கும் இலக்குமணனுக்குங் காட்டினர். இராமபிரான் அனுமாரைப் பார்த்து, '' திருநிலகண்டனை வழிபாடு

செய்தன்றி யான் உணவு கொள்ளேன். நீ விரைவாக நடந்து சென்று திருவண்ணுமலையில் இருந்து ஒரு சிவலிங்கத்தை எடுத்துக்கொண்டு வருவாயாக'' என்று கூறினர். அனுமான் அத்திக்கை நோக்கி விரைவாகச் சென்ருன். இராமபிரான் இலட்சுமணரைப் பார்த்து, '' இச்சமயத்தில் இவன் நமக்குக் கிடைத்தது நம்முடைய நல்வினையே '' என்று கூறி வியந்து புகழ்ந்தார்.

இராமபிரானும் இலட்சுமணரும் அனுமானைச் சிவ லிங்கம் கொண்டுவருமாறு அனுப்பிவிட்டு அவ்விடத்தில் அமர்ந்திருக்கும்போது முன்னுரைக்கப்பெற்ற சபரியானவள் செப்புக்குடம் ஒன்றை இடையில் தாங்கியவளாய் ஆம்பலம் பூம் பொய்கைக்கு நீரெடுப்பதற்காக வந்தாள். அவள் ஆலமரத் தடியிலே அமர்ந்திருக்கும் இராமரையும், இலட்சுமணரையும் தன்னுடைய கண்களாற் கண்டாள். முன்பு ஏழு முனிவர்களின் சாபக்கேட்டால் அவளுக்கேற்பட்டிருந்த மான் மூகம் மறைந்து மனித முகமாயிற்று. உடனே அவள் விரைந்து வந்து இராம பிரானுடைய திருவடிகளிலே வீழ்ந்து வணங்கிப் புகழ்ந்து துதித்து நின்ருள்.

இராமபிரான் சபரியைப் பார்த்து, ''உன்னுடைய வரலாறு யாது?'' என்று உசாவினர். அவள் முன் நிகழ்ந்த செய்தி களைக் கூறினள். அதனைக் கேட்ட இராமபிரான், அச்சிவ லிங்கத்தை நான் ''வணங்குவதற்கு விரும்புகிறேன்'' என்று கூறினர். சபரி ''வாருங்கள் காட்டுகிறேன்'' என்று கூறி இவர்களை அழைத்துக்கொண்டு சென்ருள். அச்சமயம் அநுமார் சிவலிங்கத்தோடு அவ்விடத்திற்கு வந்து சேர்ந்தார். நால் வரும் ஆமாத்தூரில் எழுந்தருளிய அண்ணல் முன்பு வந்து சேர்ந்தனர். அப்பொழுது விண் வழியாக அவ்விடத்திற்குப் பேரொளிப்பிழம்பு ஒன்று வந்து பொருந்தியது. அப்பேரொளிப் பிழம்பிலே சபரி கலந்து மறைந்தாள். அவளுடைய உடல் காண முடியாததாய் மறைந்தது.

பிறகு இராமபிரான் அனுமான் கொண்டுவந்த சிவலிங் கத்தைப் பதிட்டை செய்து அவனையே வழிபடச் செய்தார். தாம் முன்னரே இருந்த சிவலிங்கத்தை வழிபட்டு அவ்விலிங்கத்

திற்கு அபிராமேசர் என்று பெயரிட்டார். அனுமான் அருணையில் இருந்து கொண்டுவந்த சிவலிங்கத்திற்கு அனுமதீசர் என்று பெயர் உண்டாயிற்று. இராமபிரான் சிவபூசை முதலியவைகளைச் செய்து முடித்த பின், அனுமானைப் பார்த்து "உன்னுடைய அரசனுகிய சுக்ரீவனை இங்கு அழைப்பாயாக! அவனோடு கலந்தெண்ணிச் செய்யவேண்டிய காரியம் ஒன்று இருக்கின்றது" என்று கூறினர்.

அனுமார் சுக்ரீவனை இராமனிடம் அழைத்துக் கொண்டு வந்தார். நால்வரும் திருவட்டப்பாறையின் முன் நின்று ஒருவரை யொருவர் மோசஞ்செய்து கொள்வதில்லை என்று ஓர் உடன்பாடு செய்து கொண்டார்கள். அப்போது ஆமாத்தூர் இறைவன் இராமபிரானுக்குக் காட்சி வழங்கினர். இராமபிரான் தொழுது வணங்கினர். இராமபிரானுக்கு படைக்கலம் முதலியவைகளை வழங்கி இறைவன் மறைந்தருளினர். பிறகு இராமபிரான் தன்னுடைய துணைவர்களோடு தென் திசையை நோக்கிப் புறப்பட்டார். இராவணனோடு போர் மூண்டது. அவனை வென்று மீண்டார். சேதுவில் சிவலிங்கம் அமைத்துச் சிவபக்தனை இராவணனைக் கொன்ற பழியைப் போக்கினர். மதுரை முதலிய இடங்களில் இறை வழிபாடு செய்துகொண்டு, மீண்டும் திருவாமாத்தூரை யடைந்தார். பல சிவலிங்கங்களைப் பிரதிட்டை செய்து வழிபட்டார். சிலநாள் தங்கியிருந்து இறைவனுக்குப் பொன்னணிகள் பலவற்றைச் செய்து அணிந்தார். கோவில், மதில், கோபுரம் முதலிய திருப்பணிகள் செய்தார். வாவி, கூபம் மடாலயங்கள் அறச்சாலைகள் முதலியவைகளையும் அமைத்தார். மற்றும் பல திருப்பணிகளைச் செய்து மகிழ்ந்தார். அங்கு பல காலம் இயன்ற வழிபாடு செய்துகொண்டிருந்தார். ஆமாத்தூர் இறைவனும், இராமபிரானுக்கு நாள்தோறும் காட்சி வழங்கினர். சித்தர்களும், முனிவர்களும் திருவாமாத்தூர் இறைவனைப் போற்றுவதற்குப் பெருங் கூட்டமாக வந்தார்கள்.

" உத்தமத் தலங்கள் தம்முள் உயர்திரு ஆமாத்தூரில்
நித்தமும் பூசை செய்து நெடுஞ்சிலை இராமன் உற்றுன்
அத்தனும் கருணை நீடி அநுதினம் சேவை ஈந்தான்
சித்தரும் முனிவர் தாமும் திரள்படத் தொழவந் தாரே."

22. தெளிவு

இராவணனை வென்று மீண்ட இராமபிரான் சேதுவில் ஒரு நாள் சிவபூசை செய்தார். திருவாமாத்தூரிலோ பல நாட்கள் செய்தார். இதனைக்கண்ட முனிவர்கள் பலர் ஒன்று கூடி மறை முடிவுப்பொருளிடத்தில் ஐயங்கொண்டார்கள். இந்த இராமபிரான் யார்? அந்தச் சிவபிரான் யார்? இந்த உண்மையை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும் என்று இருவருக்கும் ஒருங்கே அமைவதான புகழ்ப்பாடலைப் பாடத் தொடங்கினார்கள்.

'' மழுவொடுமான் கரத்தணிந்த வள்ளால் போற்றி
வளையுடன்ஆ ழியும்பிடித்த வரதா போற்றி
எழுதருநான் மறைக்கிழவற் பயந்தாய் போற்றி
இரங்கஅயன் தலைகவர்ந்திட் டிரந்தாய் போற்றி
தொழுமவர்வேட் கையின்வழிச்சென் றருள்வாய் போற்றி
சுரர்தமைக்காத் தசுரர்களைத் தொலைப்பாய் போற்றி
பழுதறுபேர் அம்பலத்தில் நடிப்பாய் போற்றி
பாற்கடலில் துயில்கூரும் பகவா போற்றி

அகண்டபரி பூரணமாய் நிறைந்தாய் போற்றி
அடியவர்தம் பணிபுரிதற் கஞ்சாய் போற்றி
திகந்தமுடைத் தேவர்தொழும் தேவா போற்றி
திருவருட்பேர் ஆனந்தச் செல்வா போற்றி
முகம்கரம்தாள் அளவில்பல கொண்டாய் போற்றி
முத்தொழிலும் செயத்தகுமோர் முதல்வா போற்றி
பகர்ந்தமறைப் பொருள்முழுதும் ஆனாய் போற்றி
பரவவல்லார்க் கருள்புரியும் பரனே போற்றி''.

என்று புகழ்ந்து பாடினார்கள். இராமபிரான் முனிவர்களைப் பார்த்து ''உங்களுடைய விருப்பம் யாது?'' என்று வினவினார். முனிவர்கள் இராமபிரானைப் பார்த்து, ''நீ கதிரவன் குலத்து அரசனுடைய மகன் என்று, எமக்கு முன் நின்றுணர்த்துதல் தக்கதன்று. உன்னுடைய உண்மையான வடிவம் யாது? வேதாகமங்கள் எவ்வாறு உரைக்கின்றன. அதன் உண்மையை எங்கட்கு உணர்த்தி அருளவேண்டும் என்று வேண்டிக்கொண்டார்கள்.

அப்பொழுதே இராமபிரானுடைய மரவுரி பொன்னுடை யாகியது. தோள்கள் நான்காயின. ஆழி, சங்கம், அபயவரதம் முதலியன உண்டாயின. திங்களைப்போன்ற முகம், கண், நிறம் இவைகள் மாறுபாட்டை அடையவில்லை. முடியிலே மணிமுடி ஒன்று, கோடிசூரியர்கள் சேர்ந்து அமர்ந்தாற்போன்று மிக்க பேரொளியோடு விளங்கியது. தேவர்கள் போற்றும் தம்முடைய திருவடி தோன்றக் கருடன்மீது விளங்கினார்.

இராமபிரானுடைய இக்கோலத்தைக் கண்ட முனிவர்கள் உவகைக்கடலில் மூழ்கினார்கள். மிகுந்த மகிழ்ச்சியினால் குதித்துக் கூத்தாடினார்கள். கைகூப்பித் தொழுது வணங்கினார்கள். அவருடைய பெருமைகளைப் புகழ்ந்து பேசினார்கள்.

திருமால், முனிவர்களைப் பார்த்து, "எம்மையும், எம்மனத்தையும் அல்லாமல் வசிப்பதற்கு வேறோர் இடமற்றவனாகிய சிவபெருமானையும், எண்ணிப் போற்றி முற்பிறவியினும் நீங்கள் பூசை புரிந்துள்ளீர்கள். உம்முடைய ஐயத்தை அகற்றுதற்கு யான் கடமைப்பட்டுள்ளேன். முத்தொழில்களையும் புரிவோர் மூவராவரென்று முதுமறைகள் மொழிந்தாலும் உமையவளை இடப்பாகத்திற்கொண்ட சிவபெருமானுடைய குணகணங்கள் மற்றவர்களால் எடுத்துக் கூறத்தக்கனவல்ல. யாமும் சிவபெருமானும் வேறல்லேம் என்றே எண்ணிறந்த பலமறைகள் எடுத்துக் கூறுமாயினும், அறிவற்றவர்கள் அவ்வுண்மையினை எளிதாக உணர்ந்துகொள்ளமாட்டார்கள். உலகம் வேறு, திருமால் வேறு, சிவபெருமான் வேறு. என்று பலவாறு சொற்போர் செய்து வருந்துவார்கள் கோமுகமும் இலிங்கமுமாக நிற்கும் உண்மையை உணர்ந்து கொள்ளமாட்டார்கள்.

எல்லா உலகங்களும் நான்முகனுடைய வடிவம். அதிற்கலந்திருப்பது என்னுடைய அறிவின் தன்மையாகும். சிவபெருமான் என்னைப் பார்த்திருக்கின்ற சாட்சியாவார். இவைகளை உரைத்தால் மெய்யறிவில்லாதவர்கள் உணர்ந்துகொள்ளமாட்டார்கள். முகில் வருங்காலத்தில் அதிற்கலந்திருக்கும் நெருப்பு வெளியே தெரியுமோ? நல்லறிவு பெற்றவர்கள் என்னைச் சிவனில் இருந்து வேறுபடுத்தி இகழ மாட்டார்கள்.

மலரில் மணம்போலவும், தீயிற் சூடுபோலவும், சிவபெருமான் என்னிற் கலந்துள்ளார். இது பொய்யன்று மெய்யேயாம். உயிர், அறிவு என்று பிரித்து வாதிடுதலைப்போலச், சிவன் திருமால் என்று மாறுபட்டுப் பலர் மிகவும் வருந்துவார்கள். தீவினையாளர்கட்கு எவ்வளவு அறிவுரை கூறினாலும் பகையற்ற பொதுத்தன்மையில் பழகமாட்டார்கள். நான் சிவபெருமானுக்கு வேறல்லவென்றாலும் அப்பெருமானை நாள்தோறும் வழிபடுங்கடமையில் தவறமாட்டேன்.

என்னையல்லாமற் சிவபெருமானுக்கு எவ்விதமான ஆக்கமுமில்லை. எனக்கும் அப்பெருமானை விட்டு எவ்வகையான இன்பமும் இல்லை. முன்னைய வேதாகமங்களின் முடிவும் இஃதேயாம். பேரறிவு பெற்றவர்கள்தாம் இதனைச் செம்மையாக உணர்ந்து மனக்கோட்டந் தீர்வார்கள். மற்றவர்களோ பலவகையான மாறுபாடுகளைப் பேசிப்பிறப்பிறப்பிற் சுழலுவார்கள். பிரமஞானமென்று பேசப்பெறுவது யாதென்று ஆராயின், எல்லாப் பொருள்களும் ஒன்றென்னும் உண்மையை நன்றாக உணர்ந்து கொள்வதேயாம்.

சிவபெருமானை இகழ்ந்துரைப்பதால் எனக்குச்சினந்தான் உண்டாகுமே யல்லாமல் மன நிறைவு உண்டாகமாட்டாது. என்னை இகழ்ந்துரைத்தாலும், அச்சிவபெருமான் களிப்படையமாட்டான்; சினத்தையே அடைவான். இவ்வுண்மையினை நல்லறிவாளர்களே உணர்வார்கள் இவன் நல்லவன், அவன் பொல்லாதவன் என்று பேசும் சிற்றறிவினையுடைய தீயோர்களைத் திருத்துவதற்கு யாரால் இயலும்? தவம் ஒன்றே துணையாவதாமென்று நல்லறிவாளர்கள் அதனைச் செய்வார்களேல் மெய்யறிவு தானாகவே வந்து சேரப்பெறுவார்கள்.

எல்லா உலகங்களும் என்னுடைய வடிவமேயாகும். உண்மையாக உரைக்கின்றேன்; சிவபெருமானே என்னுடைய உயிராவன். நுட்பமான பொருளும் பருமையான பொருளும் எம்மையன்றி வேறில்லை. யாரேனும் சிவபெருமானைக்கண்டு, என்னை நீங்கள் கேட்டாற்போல் அப்பெருமானைக் கேட்டால், அவனும் இவ்வாறே உரைப்பன். கடல் சூழ்ந்த நிலவுலகில் தெய்வம் ஒன்றுதான் என்று உணர்ந்துகொள்வது மேலான சிறப்பாம்.

எண்ணற்ற பல அவதாரங்களில் நான் இத்திருவாமாத்தூரில் எழுந்தருளிய இறைவனைப் போற்றி வழிபட்டு, கணக்கற்ற வரங்களைப் பெற்று, நானிலத்தில் பலவித நன்மை செய்துள்ளேன். புகழ்ச்சி, இகழ்ச்சி எனைச்சேரமாட்டா. சிவபெருமானையே போய்ச்சேரும். நான் கூறியது உண்மை. நல்ல மாதவத்தைச் செய்த நீங்கள் இவ்வாறு மயக்கமடைந்தால் மற்று யாவர்தாம் உண்மையினை உணருவார்கள்?

மின்னலைப்போன்ற சடையை உடைய தலையில் பிறைக்கீற்றுப் பொருந்த விளங்குகின்றவர்களும், உருளைப்படை (சக்கரம்) வெள்ளிய சங்கு ஆகியவைகளை ஏந்தி என்போல விளங்குகின்றவர்களும் பலபேர் உள்ளனர். இவர்களெல்லோரும் எம்முடைய கூருக விளங்குபவர்களே. திருநீறணிந்தவர்களும், திருமண்ணிட்டவர்களும் பின்னர் அவ்வாறேயாவார்கள்.

அணு முதலிய எல்லாம் பாமேயாகும் என்று வேதாமங்களெல்லாம் விளம்பிய உண்மை, அறிவற்றவர்கட்கு மிகுந்த கசப்பை விளைப்பதாம். " இவ்வாறு விளம்பிய இராமபிரான் பின்பு பழைய வடிவத்தைக் கொண்டார்.

பிறகு எல்லோரும் விண் வழியாக அயோத்தியை அடைந்தார்கள். வசிட்டருடைய கையால் திருமுடி சூட்டப்பெற்ருர். அயோத்தியில் அபிராமேசருக்கும் முத்தாம்பிகைக்கும் திருக்கோயில் ஒன்று அமைத்து ஆதிசைவர்களைக்கொண்டு பூசை முதலியன நடைபெறுமாறு செய்தார்.

23. திருமகள் கலைமகள் வழிபாடு

திருமகளும் கலைமகளும் மாமியும் மருகியும் ஆவர். ஒருவர் இருந்த இடத்திலே மற்றவர்கள் இருக்க மாட்டார்கள். ஒருவன் சிறிது செல்வமுடையவனுக இருப்பின் கலைமகள் அவனைக் கண்ணெடுத்துப் பார்க்கமாட்டாள். அதனுல் அச்செல்வன் அறிவற்றவனுக இருப்பான். ஒருவனிடத்திலே கலைமகளாய அறிவுச் செல்வம் இருக்குமாயின் அவனைத் திருமகள் கண்ணெடுத்துப் பார்க்கமாட்டாள். அதனுல் அவன் வறுமை நிலையில் இருப்பான். இது என்றைக்கும் உலகில் நிகழும் நிகழ்ச்சி

யாகும். இருவருடைய அருளும் ஒருங்கே பொருந்தியமையக் கூடிய சிறந்த வாழ்வு, சிவபெருமானுடைய திருவருளால்தான் அமைதல் வேண்டும். முன்பு ஒருகால் நாசிகளை இழந்த திருமகளும் கலைமகளும் இச் சிவப்பதியை அடைந்து வழிபட்டுத் தங்களுடைய மூக்கு பழமைபோல் விளங்க வேண்டுமென்று வேண்டித் தவம்புரிந்தார்கள். இறைவன் அவர்கட்கு முன் தோன்றி அருள் புரிந்தான். அவர்களுடைய அறுபட்ட மூக்கு வளர்ந்து சிறப்புடன் விளங்கியது.

அரக்கர், தானவர், இரக்கமில்லாத தீயவர், அறஞ்செய்யாதவர், ஊனுண்போர், வஞ்சகர் ஆகியவர்களுடைய இல்லங்களைத் திருமகள் அடைவாளாயின் அவள் மூக்கறுபட்டவளாவள். தன் கருத்தே சரியென வாதம் புரியும் குரங்குப் பிடியை உடைய குதர்க்கர்கள், மற்றவர்களை இகழ்வோர், குருவினுடைய நிலையை உணராதவர், ஆணவமுடையோர் ஆகியோர்களைச் சேரும்போதெல்லாம் கலைமகள் மூக்கற்றவளாவள்.

24. திருநாவுக்கரசு சுவாமிகள் வந்தது

சைவ சமயாசாரியர்களில் ஒருவராகிய திருநாவுக்கரசர் திருவாய்மூரிலே வேளாளர் குலத்திலே தோன்றினர். இவருக்குத் திலகவதியார் என்னும் பெயருடைய தமக்கையார் ஒருவரும் இருந்தார். இவர் இறைவனுடைய அருள் பெற்றபின் பல சிவப்பதிகட்குஞ் சென்று தேவாரம் பாடி இறைவனை வழிபட்டார். பிறகு திருவாமாத்தூருக்கு வந்து சேர்ந்தார். இறைவன் நாவுக்கரசருக்குக் காட்சி தந்து, '' நீ தேவாரம் பாடிவிட்டு உடனே இப்பதியை நீங்கிப் போய்விடாதே. செந்தமிழ்த் தொண்டோடு உழவாரத் திருப்பணியும் செய்துகொண்டு ஈண்டு சிலகாலம் வசித்திருப்பாயாக '' என்று கட்டளையிட்டார். நாவுக்கரசரும் இறைவன் கட்டளைப்படியே தமிழ்த் தொண்டும் உழவாரத் தொண்டும் செய்துகொண்டு தங்கியிருந்தார். நாவுக்கரசர் தேவாரப்பதிகங்கள் பலபாடினர்.* ஆயினும் அவைகளெல்

*'' மாமாத்தாகிய மாலயன் மால் கொடு
தாமாத் தேடியும் காண்கிலர் தாள்முடி
ஆமாத் தூர்அரனே அருளாய் என்(று)
ஏமாப் பெய்திக்கண்டார் இறையானையே ''

தேவாரம். அப்பர்.

லாம் திருத்தில்லைப்பதியில் செல்களால் புற்று மூடப்பட்டு அழிந்து இரண்டு பதிகமே கிடைத்தன. பிறகு திருநாவுக்கரசர் பல சிவப்பதிகட்கும் சென்று இறைவழிபாடு செய்து திருப்புகலூரிலே வீடுபேற்றையடைந்தார். அப்போது திருவாமாத்தூர்ச் சிவனூர்போல் இறைவன் அங்குக் காட்சி நல்கினுர்.

25. திருஞானசம்பந்த சுவாமிகள் வந்தது

சீகாழிப்பதியில் தோன்றியருளிய திருஞானசம்பந்தர், அடியார்களுடைய திருக்கூட்டத்தோடு பல சிவப்பதிகட்குஞ் சென்று தேவாரப்பதிகங்கள் பாடினுர். அவரோடு பதினுருயிரம் அடியார்கள் உடன் சென்றுர்கள் எனவும் அவர் சிவிகையேறியே யாண்டுஞ் சென்றுரெனவும் பெரிய புராணம் கூறும். அவர் தம்முடைய அடியார்களின் திருக்கூட்டத்தோடு திருவாமாத்தூரையடைந்தார். கோபுரத்தைக் கண்டவுடன் ஊர்ந்து வந்த சிவிகையில் இருந்து கீழே இறங்கினுர். மூன்று முறை இறைவனை அந்த இடத்திலேயே அடியார்களோடு வணங்கினுர். நடந்து தெருவினூடே சென்றுர். இவரை எதிர்கொண்டழைப்பார் ஒருவரும் அங்கு நேர்ந்திலர். பிறகு அடியார்களோடு பம்பையாற்றில் நீராடி மாதைப்பரமனைப் பணிந்து போற்றிப் பதிகங்கள் பாடினுர். எல்லோருக்கும் மிகுந்த பசியுண்டாயிற்று.* பசியினுல் வருந்திய சம்பந்தர் இறைவனிடத்து '' உமைக் குறித்துக் கேள்வியுற்ற புகழ் முழுதும் பொய்யாமோ உணவில்லாமல் எம்மை வருத்துதல் முறையாகுமோ ?'' என்று பதிகத்துள் குறிப்பிட்டார். பிறகு இறைவன் எல்லோரையும் தம்முடைய அருட்பெருக்கால் காமதேனுவைக் கொண்டு தேவபோகங்களை நுகர்ந்து களிப்படையுமாறு செய்தார். பிறகு திருஞானசம்பந்தர் ஆமாத்தூரை நீங்கிப் பிற பதிகட்குச் சென்றுர்.

---

*''தொண்டர் வந்து வணங்கிமாமலர் தூவிநின்கழல்
[ஏத்துவார் அவர்
உண்டியால் வருந்த இரங்காத(து) என்னைகொலாம் ?
வண்டலார் கழனிக்கலந்து மலர்ந்த தாமரை மாதர்வாண்முகம்
அண்டவாணர் தொழும் ஆமாத்தூர் அம்மானே.''
தேவாரம். சம்பந்தர்.

26. சுந்தரமூர்த்தி சுவாமிகள் வந்தது

சுந்தரமூர்த்தி சுவாமிகள் இறைவனால் தடுத்தாட்கொள்ளப்பட்ட பின், பல சிவப்பதிகட்கும் சென்று பதிகங்கள் ... னார். இவர் பரவையாரைத் திருமணம் புரிந்த பின் இவருக்கு அடிக்கடி பொருளும் மிகுதியாகத் தேவைப்பட்டது. அதன் பொருட்டும் பல பதிகட்குச் சென்று பதிகங்கள் பாடினார். பொருள் பெறுதலை விரும்பி ஒருநாள் திருவாமாத்தூர்ப் பதியை அடைந்தார். கோபுரத்தைக் கண்டவுடன் அதனை வணங்கி ஊருக்குட் புகுந்தார். அப்பொழுது அவருக்கு எதிரே பூதம் ஒன்று வந்து கோபுர வாயிலின்முன் தோன்றியது. அது சுந்தரரைப் பார்த்து, " தாங்கள் வந்தால் பொருள் மிகுதியாகக் கேட்பீர்கள் என்று சிவபெருமான் அஞ்சியவராய்க் கோயிலைவிட்டு வெளியே போய்விட்டார் " என்று கூறியது. பிறகு சுந்தரர் பூதத்தைப் பார்த்துச், சிவபெருமான் எப்பக்கஞ் சென்றார் ? என்று வினவினர். பூதம் கிழக்குப் பக்கமாகத் தன்னுடைய கையை நீட்டிக் காட்டியது.

சுந்தரர் பூதங்காட்டிய வழியே அகரம் என்னும் ஊருக்குச் சென்றார். அங்கு ஒரு பெரிய அரசமரத்தடியிலே ஆனைமுகக் கடவுள் அமர்ந்திருந்தார். சுந்தரர் ஆனைமுகக் கடவுளைப் பார்த்துச் " சிவபெருமான் எங்கே?" என்று வினவினர். ஆனைமுகக் கடவுள் ஓர் ஐயனார் கோயிலைச் சுட்டிக் காட்டினர். சுந்தரர் ஐயனார் கோயிலுக்குச் சென்றார். அங்கு ஆமாத்தூர் இறைவன் சுந்தரர்க்குக் காட்சி வழங்கினர். சுந்தரர் சிவபெருமானைப் பார்த்துத் "தீவினையாளனாகிய என்பொருட்டு இங்கே வந்து மறைந்து கொண்டீர்ரோ ?" என்று கேட்டார்.

சிவபெருமான் சுந்தரரைத் பார்த்து, " சங்கிலிக்காக ஒரு நாள் என்னை மகிழ மரத்தடியில் போய் இருக்கச் செய்தாய். தடிப்பூதம் சொல்லிய சொல்லைக் கேட்டுக்கொண்டு இந்தத் திக்கை நோக்கி வந்தாய். நான் ஆனைமுகன் சொல்லுக்காக இந்த இடத்திலே இவ்வுருவத்தை உனக்குக் காட்டினேன். ஆமாத்தூர்க் கோயிலுள்ளும் என்றும் இவ்வாறே எழுந்தருளியுள்ளேன். நான் இத்தகைய நாம ரூபத்துடன் யாண்டும் எழுந்தருளியுள்ளேன். நான் எவ்விடத்திலே இல்லாமலிருக்

கிறேன்? எல்லாவிடத்தினும் எழுந்தருளியிருப்பதுதான் என்னுடைய இயற்கை யாகும்'' என்று திருவாய் மலர்ந்தருளினர். இதனைக் கேட்ட சுந்தரர் இன்ப துன்பம் இரண்டையும் ஒருங்கே அடைந்தார். அவ்விடம் விட்டு ஆமாத்தூர்க் கோயிலை அடைந்தார். அங்கும் அவ்வண்ணமே கண்டு மகிழ்ந்து தேவாரப் பதிகம் பாடினர்.* ஆமாத்தூர் இறைவன் சுந்தரரைப் பார்த்து "பொருள் கொடுப்பதற்கு அஞ்சிக் கோயிலைவிட்டுப் போய்விட்டதாகப் பூதம் சொன்ன சொல்லை நீயும் நம்பிக் கொண்டாய். நான் பிச்சையை உண்டு என்பினையணிந்துள்ளேன். பொன்னைப் போற்றுவதில்லை. ஆயினும் வந்தவர்கட்கு யாதுங்கொடாமல் அனுப்புவதில்லை. அம்முறைமையின்படி நான் இப்பொழுது உனக்குத் தருகிற பொருளைக் கொள்வாயாக!'' என்று கூறிக் கீழே உதிர்ந்து கிடந்த வன்னிக்காய்களை நான்கு கைகளாலும் அள்ளிச் சுந்தரர்க்கு வழங்கினர். சுந்தரர் அதனைத் தம்முடைய முன்தானையிற் பெற்றுக்கொண்டார். அக்காய்கள் உயர்ந்த சாம்பூநதம் என்னும் பொன்னுகிப் பிறங்கின. சுந்தரர் அளவற்ற மகிழ்ச்சியுடையவராய்ப் பரமனிடம் விடைபெற்றுக்கொண்டு திருவாமாத்தூரை விட்டுப் புறப்பட்டுத் திருவாரூரை யடைந்தார்.

27. இரட்டைப் புலவர்கள்

இரட்டைப் புலவர்கள் கல்வியறிவிற் சிறந்தவர்களாய்ப் பல இடங்கட்குச் சென்று தமது புலமை நலத்தைப் புலப்படுத்திக்கொண்டிருந்தனர். இவர்கள், இறைவன் கட்டளைப்படி திருவாமாத்தூர்ச் சிவபெருமானுக்குக் கலம்பக நூல் ஒன்று இயற்றினர்கள். அந்நூலை அக்காலத்தில் ஆட்சிபுரிந்து கொண்டிருந்த அரசன் அரங்கேற்றுவதற்கு ஏற்பாடு செய்

---

*''பொன்னவன் பொன்னவன் பொன்னைத்தந்தென்னைப் [போகவிடா
மின்னவன் மின்னவன் வேதத்தின் உட்பொருளாகிய
அன்னவன் அன்னவன் ஆமாத்தூர் எம்அடிகளை
என்னவன் என்னவன் எனமனத் தின்புற்றிருப்பனே.''
தேவாரம். சுந்தரர்.

தான். நூல் அரங்கேற்றந் தொடங்கியது. ஒரு செய்யுளிலே திருவாமாத்தூர்க் கோயிலைப் பம்பையாற்றுக்கு மேற்குக் கரையிலுள்ள கோயில் என்று குறிப்பிட்டுப் பாடியிருந்தார்கள். உண்மையில் அந்நாளில் கோயில் ஆற்றுக்குக் கீழ்கரையில் இருந்தது.

அரங்கேற்றஞ் செய்த சமயத்தில் அங்கிருந்தவர்கள் கோயில் கீழ்கரையில் இருக்கிறது. அதனை மேற்கரைக் கோயில் என்று பாடியிருக்கிறார்கள். ஒருவர் கண்ணுடையவர். கண்ணில்லாதவருக்குச் செய்தி தெரியாதென்றாலும், 'கண்ணுள்ளவர் கண்டு கூறியிருக்கலாமே. இவர்களைத் தெய்வத்தன்மை வாய்ந்த புலவர்கள் என்று எல்லோரும் சொன்னார்களே இதுதானா தெய்வத் தன்மை?'' என்று கூறினார்கள். பலரும் பலவாறாகப் பேசினார்கள்.

இரட்டைப் புலவர்கள், வாக்குத் தெய்வத் தன்மையாக அமைந்திருக்கிறது. இதனுடைய உண்மையை உணர்ந்தலலாமல் மேற்கொண்டு நூலை அரங்கேற்ற மாட்டோமென்று கூறி எழுந்துவிட்டார்கள். அவையுங் கலைந்துவிட்டது. அன்றிரவு பெருமழை பொழிந்தது. பம்பையாறு கரைபுரண்டோடத் தொடங்கியது. வடபுறம் ஓடிய ஆறு தென்புமா நெறிமாறிச் சென்று திரும்பியது. இதனால் மேற்கரைக் கோயில் என்று பாடியிருந்தது உண்மையாக முடிந்துவிட்டது. மக்கள் யாவரும் புகழ்ந்து 'வணங்கினர். மேற்கொண்டு அரங்கேற்றம் தொடர்ந்து நடந்தது.

அரசன் இரட்டைப் புலவர்களுடைய பெருமையை நன்குணர்ந்து அவர்களை வணங்கினான். என்னால் தங்களுக்கு ஆகத்தக்க உதவிகளைச் செய்யக் காத்திருக்கிறேன். உங்களுடைய விருப்பத்தைத் தெரிவிக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டான். இரட்டைப் புலவர்கள் ஆமாத்தூர் அண்ணல் எங்களுடைய விருப்பத்தை நிறைவேற்றியருள்வார். நீ ஈண்டு வரும் இரவலர்களுடைய விருப்பங்களைத் தீர்ப்பாயாக '' என்று உரைத்தார்கள். இவர்கள் இத்தலத்திலேயே வீடுபேற்றையடைந்தார்களென்று அறிஞர்கள் உரைப்பர்.

28. சதானந்தர்

சதானந்தர் என்னும் பெயருடைய இவர் ஓர் அந்தணர். திருவாமாத்தூரிலே வேதியர்களுக்கெல்லாம் தலைவராய் விளங்கியிருந்தார். இவர் தம்முடைய மனைவியோடு திருவாமாத்தூரில் தவஞ்செய்யும் தொழிலில் தலைசிறந்து நின்றார் சிவபெருமானுடைய திருவடிவங்கள் பலவற்றுள்ளும் கூத்த (நடராச)ப் பிரானுடைய திருக்கூத்துக் கோலமே இவருடைய மனதுக்கு மிகவும் பிடித்ததாக இருந்தது. அவ்வடிவத்தையே நாளும் வழிபட்டார். ஆயிரத்தெட்டு உருத்திராக்கமணி மாலைகளை அணிந்தார். உடல் முழுதும் திருவெண்ணீற்றைப் பூசி மகிழ்தார். எந்தத் தெய்வத்தையும் தாம் வழிபடும் தெய்வத்தின் வேறொரு வடிவமாக மதிப்பாரேயல்லாமல் எதனையும் இகழ மாட்டார்.

இவர் சித்துச் செய்தலை எத்துணையும் விரும்பவில்லை. சிவனடியார்க்கு அன்பு செய்தலையே சிறந்த பேருக மதித்தார். எவ்வுயிரும் சிவபெருமானுடைய வடிவமே எனக்கருதும் பெற்றியுடையவராக இருந்தபடியால் புலைமிகு மீமாஞ்சர் வழியைச் சிறிதும் நாடவில்லை. சிவபெருமானுடைய திருவடிவத்தையே எப்பொழுதும் உள்ளத்தில் எண்ணிப் பிரணவத்தோடு ஐந்தெழுத்தருமறையை உருவேற்றிக்கொண்டிருந்தார். கற்புக்கரசியாகிய மனைவியைப் பெற்றிருந்த இவர், பல ஆண் மக்களையும் பெண் மக்களையும் மக்கட் செல்வமாகப் பெற்றார். எந்நாளும் பிறர் உதவியை எதிர்பார்த்து வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்த இவர், இறைவனைப் போற்றி மகிழ்கின்றபடியால் இன்பச் சிறப்பில் குறைவில்லாதவராக விளங்கினர் சிவபக்தியில் சிறந்து விளங்கிய இவரை, முதலில் திருமகள் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. அதனைக் குறித்துச் சதாநந்தர் கவலைப்பட்டவரும் அல்லர். இவருடைய பெயர் எப்பொழுதும் (சதா) களிப்புடன் (ஆனந்தம்) விளங்கியிருந்தபடியால்தான் சதாநந்தர் என்று வழங்கியது.

நாட்கள் பல சென்றன. ஆமாத்தூர் இறைவனுடைய திருவருளால் கதிரவன் குலத்துக் காவலன் ஒருவன் சதாநந்தர்

இல்லத்தையடைந்து அவருடைய வறுமை முழுவதையுங் களைந்து ஆங்கு, திருமகள் வாழ்வுறுமாறு செய்துவிட்டுச் சென்றான். இதனைக் கண்டு சதாநந்தர் இறுமாப்படைந்துவிட வில்லை. எல்லாம் திருவருட் செயலே என்று உள்ளந் தெளிந் தவராய், வழக்கம்போல் இறைவனைப் போற்றி வழிபட்டுக் கொண்டிருந்தார்.

இறைவன் சதாநந்தரைத் தமக்கு அண்மையில் வைத்துக் கொள்ளத் திருவுளத்தில் எண்ணினார். இயமன் சிவனடி யாருடைய வடிவத்துடன் வந்து பண்போடு அழைத்துக் கொண்டுபோய் எமபுரத்தைக் காண்பித்துப் பிறகு கயிலை மலையில் சேர்த்தான். சிவபெருமான் சதாநந்தரை மிகுந்த மகிழ்ச்சியுடன் வரவேற்றார். பிறகு அவரைப் பார்த்து உமக்கு எப்பதவி விருப்பமாயினும் அதனைக் கூறும். அப்பதவியை அளிக்கிறேன் என்று கூறினார். இதனைக் கேட்ட தேவர்கள் முதலானோர் மிகுந்த கலக்கத்தை அடைந்தார்கள். இப்புதிய அந்தணரால் நம்மில் யாருடைய பதவிக்குக் கேடு வரு கிறதோ என்று எண்ணினார்கள்.

சிவபிரான் திருவாய் மலர்ந்தருளியதைக் கேட்ட சதா நந்தர், அப்பெருமானுடைய அடி மலர்களை வணங்கிப் போற்றி னார். இப்பதவிகள் எல்லாம் எனக்கு எதற்காக ? உனது அடி யவர்கட்கு இனிய தொண்டினைச் செய்தாருடைய கூட்டத்தில் எனக்குச் சிறிது இடந்தந்தாற்போதும் என்று கூறினார். சதா நந்தருடைய மொழியைக் கேட்டு உமையவள் முதலானோர் மிகுந்த நாணத்தை அடைந்தார்கள். இந்த அந்தணன் நமது வாழ்வுகள் எல்லாவற்றையும் தாழ்வு செய்யும் பெருமை யினையுடைய சிறந்த மெய்யறிவைப் பெற்றிருக்கிறான் என்று பேசிக்கொண்டார்கள். தேவர்களோ மலர்மாரி பெய்தனர்.

சதாநந்தர் பிறகு சிவபெருமானைப் பார்த்து வணங்கி, "என்னை இங்கு அழைத்துக்கொண்டு வந்தவர்கள் எமபுரத் திலே வருந்தும் உயிர்களைப் பார்க்குமாறு செய்தார்கள். முடி வற்ற துன்பத்தை நுகரும் அவ்வுயிர்களெல்லாம் ஈடேய்தும்

படி அருள் செய்ய வேண்டுமென்று வேண்டிக்கொண்டார். இறைவன், அவ்வாறே கொண்டு வருமாறு செய்து, அவைகட்கு சிறந்த கதியை வழங்கினர். பிறகு சதாநந்தருக்கு இனிய சாமீப பதவியை வழங்கினர். சாமீப பதவியை அடைந்த இந்தச் சதாநந்தரைப் போல் எமலோகத்தில் வருந்திய உயிர்களையெல்லாம் மேலான கதியில் சேர்த்தவர் எவருமிலர்.

29. விசித்திரலீலை

கன்னட நாட்டில் விச்சலமன்னன் என்னும் சமண அரசன் அரசாட்சி செய்து கொண்டிருந்தான். அம்மன்னவனிடத்தில் வசவர் என்னும வீரசைவர் அமைச்சராக அமைந்திருந்தார். இவர் நாள்தோறும் ஒன்றரைலட்சம் சிவனடியார்கட்கு உணவளித்து அவர்கள் கேட்பதை யெல்லாம் வழங்கிக் கொண்டிருந்தார்.

ஒருநாள் வீரேசர் என்னும் சிவனடியார், வசவருடைய மனைக்குச் சென்றார். வசவருடைய அறங்களைக்கண்டு களித்தாராயினும், இவர் வீரசைவராக இருந்தும் திருநீறணியாத சமண அரசனிடம் அமைச்சராகத் தொழில் புரிகின்றாரே என்று மனத்திலே மாறுபாடு கொண்டார். அதனால் வசவருடைய மனையில் உண்ணாமல் வேறோர் ஊருக்குச் சென்று உணவருந்தி விட்டு ஓர் அறச்சாலையில் கண் துயின்றார். அப்பொழுது சிவபெருமான் ஓர் சிவனடியாரைப் போல் கோலம் பூண்டு, வீரேசருடைய கனவில் தோன்றினர். அவரை வீரேசர் கைகுவித்து வணங்கினர், வசவருடைய செய்தியைச் சொல்லி வருந்தினர். அடியார் கோலத்தில் போந்த சிவபிரான், "தூயவர்களாகிய மாதவர்கள் பலரைப் போற்றும் அம் மன்னனிடத்தில் நீ வெறுப்புக் கொள்வது நேர்மையன்று" என்று கூறினர். மாதவர்களைப் போற்றும் அம்மன்னன் சமணனாக இருப்பதற்குக் காரணம் என்ன? அதனை எனக்குக் கூறி என்னுடைய உள்ளத்தைத் தெளிவிப்பீராக என்று வீரேசர் வேண்டிக் கொண்டார்.

சிவபெருமான் வீரேசரைப் பார்த்துப் பண்டை நாளில், சீகாழி யில், உள்ள ஓர் முதிய அந்தணன். பாண்டி நாட்டில் இருந்து சமணசமயம் ஒழியுமாறு தவஞ்செய்தான். நீயும் அவ்வாறு செய்ய லாம். ஒரு நாள் நமனாகிய தருமன் நந்திதேவருடைய உடன் பாட்டைப்பெறாமல் சிவனார் திருமுன் சென்றான். அவனுடைய செயலைக்கண்ட நந்திதேவர் வெகுண்டு, "நீ சமண மன்னன் ஆகக் கடவாய்" என்று சாபங் கொடுத்தார். அவ்வளவில் நமன், "நீ அந்தச் சமண மன்னனுக்கு அமைச்சனாகக் கடவாய் என்று தானுஞ் சாபங் கொடுத்தான். இருவரும் அரசனும் அமைச்சனும் ஆனார்கள். இதனை நீ உணர்ந்துகொள். நந்தி முதலிய பல பேர் வழிபட்டுச் சிறந்த பயனைப் பெற்றது பம்பை யாற்றின் கரையிலுள்ள திருவாமாத்தூர் என்னுஞ் சிறந்த சிவப் பதியாகும்" என்று கூறி மறைந்தார்.

வீரேசர் விழித்தெழுந்தார். இரவினும் பகலினும் வழி நடந்து திருவாமாத்தூரை யடைந்தார். ஆம்பலம்பூம் பொய்கை யில் நீராடினார். சோம்பலின்றி ஐந்தெழுத்தைக் கூறித் தவஞ் செய்திருந்தார். எவளேனும் ஒருமாதிடம் நின்னிடம் வாழு கின்ற சேவலங் கொடியோன் மகவாக வரும்படி அருள்செய்து நந்தி கணத்தோர் சேர்க்கும் தீவினை வேர்களைக் களைவாயாக" என்று வேண்டிக் கொண்டார்.

ஆண்டு ஒன்று சென்றது. மாதையில் எழுந்தருளிய சிவ பிரான் திருவருள் சுரந்தார். வீரேசரிடம் ஒரு சித்தராக வந் தார். சிவபெருமான் உன்னுடைய எண்ணத்தை நிறைவேற்று தற்குத் திருவுளங்கொண்டுளார் என்று செப்பினார்; உடனே மறைந்தார்.

மறைந்தவர் கலியாணபுரத்தில் நந்தியின் கூறாகிய வசவ ரிடந்தோன்றினார். வசவர் இவரைச் சிவபெருமான் என்றே பாராட்டிப் போற்றினார். சித்தர் வசவரைப் பார்த்து, "உனக்கு ஒப்பானவர்களை இவ்வுலகத்தில் கண்டிலேன், நீ சிவனடியவர் கட்காக நல்ல தொண்டு செய்கின்றாய்" என்று இயம்பினார். வசவர் சித்தரைப் பார்த்து வீரேசர் வந்து இகழ்ந்து அமுது செய்யாது சென்ற செய்தியைச் செப்பி வருந்தினார்.

இதனைக் கேட்ட சித்தர் கோடிக்கு ஒருவர் அவ்வாறு இருப்பார்கள். அவர்கள் ஈடும் இணையும் இல்லாதவர்கள். அத்தகையோருடைய பெருமையை நம்மால் உரைக்க முடியாது அவர்களோடு ஊடுதல் நல்லதன்று. அவர் உன்னிடம் நோக்கி வருதற்கு நல்ல மருந்தினை நான் நல்குகின்றேன். மகிழ்வாயாக'' என்று உரைத்தார். சிறிது வழிபாட்டுப் பிரசாதம் ஒன்றை வழங்கினர் வசவருக்கு. அதனைப்பெற்றவசவர், உடனே அதனை உண்டிலர். இன்று செய்ய வேண்டிய வழிபாட்டினைச் செய்து முடித்தபின் உண்ணலாம் என்று எண்ணினர்- தமது மோலடையின் ஒரு முனையிலே முடிந்தார் சித்தராக வந்தவர் சென்றார். இறைவனுக்குப் படைத்த வுணவையே உண்பது வீராகம முறை.

அவ்வமயத்தில் அரசன், அமைச்சராகிய வசவரை அழைத்துவா என்று ஆளனுப்பினன். வசவர், சித்தர் அளித்த புத்தமுதை மறந்தார். நீராடி நியமமுடித்து விரைந்து அரசன் பால் மேவினர்.

வசவேசருக்குத் தங்கை யொருத்தி இருந்தாள். அவள் சிறந்த அழகினள்; மங்கைப் பருவத்தினள்; மணமாகப் பெருதவள்; நல்லொழுக்க வழியிலே நின்றவள்.

வசவருடைய இல்லத்தில் வண்ணன் அழுக்குத் துணியெடுப்பதற்கு வந்தான். வசவருடைய தங்கை அழுக்காடைகளைப் பொறுக்கினள். ஓராடையில் சித்தர் அளித்த பிரசாதம் முடிந்திருத்தலைக் கண்டாள். அவர் முடிந்த சமயத்தில் அதனை அவள் பார்க்கவில்லை. இப்பிரசாதம் பெருமையிற் சிறந்ததாக இருத்தல் வேணடும். இன்றேல் நம்முடைய அண்ணனர் இதனை இங்கு முடிந்திடார். இதை வீணுக்காமல் நாமே உண்டு விடுவோம் என்று எண்ணி உண்டாள். அக்கணமே முருகன் கலை ஒன்று அவள் வயிற்றை யடைந்தது.

அத்திங்கள் முதல் அவளுக்குப் கருப்பக் குறிகள் பலவும் வெளித் தோன்றலாயின. காரணமுணராது காரிகை திகைத்துக் கவன்றாள். ஊர் வாழ் மானிடர் பலவாறு உரையாடலாயினர்.

இச் செய்தி, விச்சலமன்னன் காதுகட்கும் எட்டியது அவன் அமைச்சாகிய வசவரை அழைத்து வினுவினுன். அவர் எனக் கொன்றுஞ் செய்தி விளங்க வில்லை. உன்னுடைய ஆணைவழி நடப்பாயாக" என்று உரைத்தார்.

விச்சலமன்னன் வசவரோடு அவருடைய மனைக்குச் சென் ருன். திரைக்கு அப்பால் தானிருந்து கொண்டான். அவளைத் தோழிகளோடு இருக்கச் செய்தான். விச்சலராசன் தெய்வக் கருக் கொண்டுள்ள மங்கையை நோக்கி, "இந்நிகழ்ச்சி எவ்வாறு ஏற்பட்டது? " என்று உசாவினுன்.

வசவருடைய தங்கை. "என்னுடைய வயிற்றில் ஒருமக விருத்தலையானும் உணருகின்றேன். என்னை எந்த ஆண்மக வனும் தொட்டதில்லை. இவ் வுண்மையை இறைவன்தான் உணர்வான்" என்று கூறினுள்.

அரசன் அவளுடைய மொழிகளைக் கேட்டு வருத்தம் அடைந்தான். நீ உரைப்பவைகளை உலகம் ஒப்புக்கொள்ள மாட்டாது என்று உரைத்தான். அவ்வளவில் அம்மங்கை நல்லாள் " தேவர்களே ! மற்றவர்கள் பலவாறு பேசுவதற்கு முன் தாயறியாச் சூல் இஃது என்பது உண்மையானுல், நீங்கள் உண்மையை உணர்த்துங்கள் ! இன்றேல் யான் நீற்றறையில் புகுவேன் " என்று கூறினுள்.

அவள் இம்மொழிகளைக் கூறி முடிப்பதற்குள் அவளுடைய கருப்பத்தில் இருந்த மகன் கூறலானுன். "விச்சல மன் னனே ! கேட்பாயாக ! உன்னுடைய அமைச்சன் ஒருநாள், சித்தர் ஒருவர் வழங்கிய பிரசாதத்தைப் பெற்ருன். அவன் அதனை இன்றுவரை மறந்துவிட்டான். அவன் அதனை மேலாடையில் முடிந்துவைத்தான். நீ விரைந்து கூப்பிட்டபடி யால் அவன் அப்பிரசாதத்தை இழந்துவிட்டான். இக்கன் னிகை அதனைப்புசித்தபடியால் நான் உட்புகுந்திருக்கின்றேன். நான் முருகனுடைய கலைகளில் ஒன்ருவேன் " என்று கூறி னுன். இதனைக் கேட்டவர்கள் அடைந்த வியப்புக்கு ஓர் அள

வில்லை. அரசன் உள்ளத்தில் அச்சம் உண்டாகியது. வசவரோ தலை கவிழ்ந்திருந்தார். அவர் அவ்வுணவினை நாம் உண்டிருந்தால் மாந்தாதாவைப்போல் நாமே கருக்கொண்டிருந்தாலும் இருக்கக் கூடும். அவ்வுணவினை மங்கையுண்டதே நல்லதாகப்போயிற்று. வீணாகப்போயிருக்க வேண்டியது இவ்வாறு பயன்பட்டது சிவபெருமானுடைய திருவருளே என்று மிகுந்த மகிழ்ச்சியை அடைந்தார். இச்செய்தி ஊர்தோறும் பரவியது. திருவாமாத்தூரிலே தவஞ்செய்திருந்த வீரேசர் காதுகளுக்கும் எட்டியது. அவர் மிகுந்த களிப்புக் கடலில் அமிழ்ந்தனர். மக்களனைவரும் கருக்கொண்ட மங்கையைப் பாராட்டிப் போற்றினர்.

திங்கள்கள் பத்தும் சென்றன. வசவருடைய தங்கை, சிறிது வருத்தமில்லாதவளாய், வேற்படையையும் இலிங்கத்தையுந்தாங்கிய பேரழகுமிக்க குழந்தையொன்றைப் பெற்றாள். அக்குழந்தை ஒரு முகூர்த்த நேரத்தில் வளர்ந்து பேராண்மையும் போர் செய்யுந்திறமையும் உடையதாய் அமைந்து விளங்கியது.

விச்சலராசன் வசவருடைய தங்கை, குழந்தையைப் பெற்ற செய்தியைக் கேட்டுக் கலங்கினன். அரண்மனையில் தீய சகுனங்கள் பல உண்டாயின. நம் அரசு நீங்குமோ, அல்லது நாம்தான் ஒழிவமோ, எல்லாம் அருகனுடைய திருவருள் என்று எண்ணிக் கலக்கத்தோடு நாட்களைக் கழித்திருந்தான். முருகன்தான் தோன்றியுள்ளான் என்பதை எப்படி அவன் அறிவான் ?

பிறந்த குழந்தைக்குச் சின்ன வசவேசர் என்று பெயரிட்டனர். அக்குழந்தை அரசனிடம் அமைச்சுத் தொழிலுக்குப் போகவேண்டாம் என்று வசவண்ணரைத் தடை செய்தது. அங்கிருந்த சிவனடியார்கள், மகிழ்ச்சி மிகுந்து ஆரவாரஞ்செய்தார்ள்க. இதனைக் கேட்டுச் சமணர்கள் கலங்கினர்கள். தாங்கள் அழிந்தொழிவதற்குக் காலம் வந்துவிட்டதென்று எண்ணினர்கள். விச்சலராசனிடம் போய் விவரம் சொன்னர்கள். இச்செய்

தியை விச்சலராசன் கேட்டு வருந்தினன். சின்னவசவேசர் சின்னாளில்விச்சலராசனை வெற்றிகொண்டார். பிறகு அந்நாடு முழுவதினும் வீர சைவ சமயத்தைப் பரப்பினர்.

வரலாறு நிறைவெய்தியது

பின்னிகழ்ச்சி

மிகப் பெருமை பொருந்திய இச்சிவப்பதியில் பல்லவ அரசர்கள், சோழ அரசர்கள், முதலியோர் அரசு புரிந்த காலத்தில் திருப்பணிகள் பல செய்து கட்டளைகள் அமைத்தார்கள். இராயர் ஆட்சியில் கோபுரம் அடிப்படை செய்தனர். இப்பொழுது பழைய திருப்பணிகளில் புதுமையாகச் சில செய்யப்பெற்றும், மின்சார விளக்குகள் அமைக்கப்பெற்றும் குடமுழுக்குச் செய்யப்பெற்றது. கோபுரப் பணியும் பிறவும் நிறைவேற்றத் திருவருள் துணைபுரிக.

வாழ்த்து – வெண்பா

ஆமாத்தூர் வாழ்க ! அழகியநா தப்பெயர்கொள்
கோமான்சீர் வாழ்க! எதிர்க் கோயில்கொண்ட-சீமாட்டி
முத்தாம் பிகைவாழ்க ! முன்னுமடி யார்வாழ்க !
இத்தா ரணிவாழ்க வே !

அருட்பெருஞ்ஜோதி அச்சகம்
சென்னை

இப்புத்தகம் கிடைக்கும் இடம் :—

ஸ்ரீ அபிராமேஸ்வரர் தேவஸ்தானம்,

திருவாமாத்தூர்,

விழுப்புரம் P. O